# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1809/12 - 2013 මැයි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.05.09

*1809/12 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**ஊவா மாகாண மாகாண சபை**

*ஊவா மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க,*
*சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச் சட்டம்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபையால் 2013, ஏப்பிறல் 4 ஆந் திகதி சம்மதிக்கப்பட்டு, 2013, ஏப்பிறல் 22 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்துவதற்காக ஊவா மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்டுள்ள பூர்வாங்க நியதிச் சட்டத்தை அனைவருடைய கவனத்திற்காகவும் இத்தால் வெளியிடுகின்றேன்.*

*கே. டி. சிறிசேன,*
*செயலாளர்.*
*ஊவா மாகாண மாகாண சபை.*

*சபை செயலாளர் அலுவலகம்,*
*ஊவா மாகாண மாகாண சபை,*
*இராஜ வீதி,*
*பதுளை,*
*2013, ஏப்பிறல் 23.*

***ஊவா மாகாண மாகாண சபையின் 2013 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச் சட்டம்***

ஊவா மாகாணத்தில் வாழும், அனாதைகள், கைவிடப்பட்ட, நிர்க்கதியற்ற, துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்பட்ட பிள்ளைகளின் பாதுகாப்பு, முன்னேற்றம் என்பவற்றை கவனத்திற் கொண்டு, நடாத்தப்படும் நிறுவனங்களை பதிவு செய்தல், மீளாய்வு செய்தல், நிர்வகித்தல் மற்றும் நடாத்தல் என்பவற்றுக்காகவும், அதற்கு இடைநேர் விளையக்கூடிய விடயங்களை ஏற்பாடு செய்வதற்கான நியதிச் சட்டமாகும்.

இந்நியதிச் சட்டம் 1941 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, அனாதைகள் இல்லம் கட்டளை சட்டத்திற்கு (142 ஆம் அத்தியாயம்) இந்நியதிச் சட்டத்தின் மூலம் ஒவ்வாமையாக்கப்படுகின்றது. 1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, சிறுவர் மற்றும் இளைஞர், யுவதிகள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 50, 51 ஆம் இலக்க, அத்தியாயங்கள் ஒப்புமை உடையனவாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் இவ்வாறு விதிக்கப்படுகின்றது.

1. இந்த நியதிச் சட்டத்தை ஊவா மாகாணத்தின் 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சிறுவர் அபிவிருத்தி நிலைய நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்துவதுடன், ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களால் அனுமதிக்கப்பட்ட நாள் முதல் அமுலில் இருக்கும். சுருக்கப் பெயர்.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

I ஆம் பகுதி

**நோக்கங்களும் கடமைகளும்**

நோக்கங்கள்.

2. ஊவா மாகாணத்தில் வாழும், பிறந்ததில் இருந்து பதினெட்டு வயதுவரை கைவிடப்பட்டவர்கள், அனாதைகள் நிரக்கதியற்றவர்கள், துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட பிள்ளைகளின் நலன் கருதி கீழ் குறிப்பிடப்படும் கடமைகளை நிறைவேற்ற வேண்டிய இந்நியதிச் சட்டத்தின் நோக்கமாகும் :-

1. தங்குமிட சூழலின் பொறுப்பு, பாதுகாபபு மற்றும் பராமரிப்பு என்பன ;
2. வயதிற்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு உணவு வழங்குதல் ;
3. சுகாதார பாதுகாப்பையும், சூழலுக்கு தேவையான ஆடைகளையும் பெற்று கொடுத்தல் ;
4. மறுசீரமைப்பு செயல்மூலம் உளப் பாதுகாப்பு மற்றும் உள வளர்ச்சிக்கு தேவையான வசதிகளை பெற்று கொடுத்தல் ;
5. சந்தர்ப்பத்திற்கு ஏற்ற முறையான, முறைசாரா கல்வியையும், தொழிற் பயிற்சியையும் பெற்று கொடுத்தல் ;
6. திறமைகளும் ஆற்றலும் வளரச் செய்யக்கூடிய வகையில் நுண்கலை ரீதியிலான, விளையாட்டு ரீதியிலான மற்றும் விளையாட்டு ரீதியிலாக தேவைப்படும் வசதிகளை பெற்றுக் கொடுத்தல் ;
7. ரசனையை அதிகரிக்க தேவையான வசதிகளை பெற்றுக்கொடுத்தல் ;
8. அறிவு மற்றும் புத்தி வளர்ச்சிக்கு தேவையான நூலக சாலைகள் உட்பட ஏனைய வசதிகளை பெற்றுக் கொடுத்தல் ;
9. சமய, கலாசார, பண்பாட்டு ரீதியிலான மற்றும் ஆண்மீக வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ;
10. உறவினர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் இடையில் தரமான உறவுகளை ஏற்படுத்திக் கொண்டு தேவையான இடத்தில் தேவையான வகையில் செயற்படுதல்.

மாகாண நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை ஆணையாளரின் அலுவல்கள்.

3. இந்நியதிச் சட்டத்தின் கடமைகளை நிறைவேற்றல், வழிகாட்டல், மீளாய்வு மற்றும் நிர்வாகம் செய்வதற்காக இதன்பின்னர் "ஆணையாளர்" என அறிமுகப்படுத்துகின்ற ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவை ஆணையாளர் பெயரில் ஆணையாளர் ஒருவர் ஊவா மாகாண ஆளுநர் அவர்களினால் நியமிக்கப்பட வேண்டும் என்பதோடு, ஆணையாளர் இலங்கை நிர்வாக சேவையில் முதலாம் தர வகுப்பைச் சேர்ந்த உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும். மேலும் அவருக்கு உதவுவதற்காக பிரதி உதவி ஆணையாளர், நன்னடத்தை உத்தியோகத்தரும் தேவைப்படும் என உணரும் சந்தர்ப்பத்தில் ஏனைய உகந்த மற்றும் தகுந்த உத்தியோகத்தர்களை நியமித்துக் கொள்ளலாம்.

II ஆம் பகுதி

**சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்**
**பதிவுகளை இரத்துச் செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்**

சிறுவர் அபிவிருத்தி நிலையம்.

4. ஊவா மாகாணத்தில், வசிக்கும் பிறந்ததில் இருந்து பதினெட்டு வயது வரையில் கைவிடப்பட்ட அனாதை நிலைக்கு தள்ளப்பட்ட, நிர்க்கதியற்ற துஷ்பிரயோகத்திற்கு இலக்கான பிள்ளைகளை பொறுப்பேற்கின்ற, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும், விடுதிகளில் வைத்து அவர்களை பேணி பாதுகாக்கின்ற ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள, ஒவ்வொரு நிறுவனமும், இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாள் முதல் சிறுவர் அபிவிருத்தி நிலையம் என கவனத்தில் கொள்ள வேண்டும்.

பதிவு செய்ய வேண்டும் என்பது.

5. ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு அபிவிருத்தி நிலையத்தையும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல் வேண்டும்.

(1) இந்நியதிச் சட்டம் அமுலுக்கு வந்த நாளிற்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றினால்; அரை அரச நிறுவனமொன்றினால் அல்லது அரச சார்பற்ற நிறுவனமொன்றினால் நடாத்தி செல்லப்படும் ஒவ்வொரு சிறுவர் இல்லமும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் மீண்டும் ஊவா மாகாணத்தின் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ், சிறுவர் அபிவிருத்தி நிலையமாக பதிவு செய்தல் வேண்டும்.

(2) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவையும் அடிப்படையாக கொண்டு ஆணையாளரினால் பூர்வாங்கமாக நடாத்தப்பட்ட விசாரணைகளை கவனத்திற் கொண்டு, பதிவை பெற்றுக் கொடுக்க வேண்டியதோடு மூவாண்டுகளுக்கு ஒரு முறை நடாத்தப்படும் கலந்துரையாடலுக்கு பின்பு பதிவை புதுப்பித்து கொள்ளல் வேண்டும்.

ஊவா மாகாணத்திற்குள் பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பாக பட்டியலொன்றை நடாத்தி செல்ல வேண்டியதோடு, பொருத்தமான சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான பதிவுகளை பெற்றுக்கொடுக்க வேண்டும்.

(3) இந்நியதிச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின் ஆரம்பிக்கப்படும் அனைத்து சிறுவர் அபிவிருத்தி நிலையமும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுதல் வேண்டும். நிறுவனத்திற்கான பிள்ளைகளை பதிவு செய்யப்பட்ட பின் சேர்த்துக் கொள்ள வேண்டியதுடன் பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளும் பணிகள் ஆணையாளரினால் இடம்பெற வேண்டும் ;

பதிவு செய்வதற்கான தகமைகள்.

6. மேலே குறிப்பிடப்படும் 5 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்வதற்காக மீண்டும் விண்ணப்பிக்கின்ற ஒவ்வொரு சிறுவர் அபிவிருத்தி நிலையமும் கீழ் குறிப்பிடப்படும் தகமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :-

(1) சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை நடாத்தி செல்வதை நோக்கமாக கொண்ட யாப்புடன் கூடிய பதிவு செய்யப்பட்ட அரசாங்க, அரை அரசாங்க, அரச சார்பற்ற நிறுவனம் அல்லது அரசுடன் தொடர்புடைய நிறுவனமாக வேண்டும் ;
(2) தற்பொழுதும் ஊவா மாகாணத்தில் நடாத்தி செல்கின்ற எந்த ஒரு சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றையும் பதிவு செய்வதற்கு ஏறத்தாள பத்து மாணவர்கள் இருத்தல் வேண்டும் ;
(3) சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை நடாத்தி செல்கின்ற நிறுவனமொன்றிற்கு அவ் நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் சட்டப்பூர்வமான உரிமையை பெற்றுக்கொடுத்திருத்தல் வேண்டும் ;
(4) சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை நடாத்தி செல்கின்ற நிறுவனத்திற்கென ஐந்து இலட்சத்திற்கு குறையாத நிலையான நிதியமொன்றிருத்தல் வேண்டும்.
(5) இங்கு மூன்றாம் உப அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரங்களின்படி சிறுவர் அபிவிருத்தி நிலையம் நடாத்திச் செல்ல வேண்டும்.

பதிவு செய்வதற்காக கோரும் முறை.

7. ஒவ்வொரு அபிவிருத்தி நிலையத்தையும் பதிவு செய்வதற்கான கோரிக்கையொன்றை சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் உரிமையாளர் அல்லது முகாமையாளர் அல்லது நிர்வாகிகளினால் இந்நியதிச் சட்டத்தின் முதலாவது உப அட்டவணையில் குறிப்பிடப்படும் மாதிரி படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்பத்திரமொன்றின் மூலம் ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அரச சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் அதிகாரம் ஆணையாளருக்கு உரியதாகும்.

அறிக்கைகளை பெற்றுக் கொள்ளல்.

8. சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை பதிவு செய்வதற்கான கோரிக்கையொன்று கிடைத்த பின், ஆணையாளர் அவர்களினால் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பான அறிக்கையொன்று சமர்ப்பிக்குமாறு கோட்டப் பொறுப்பாளராக இருக்கும் நிலைபொறுப்பதிகாரியான நன்னடத்தைகள் உத்தியோகத்தருக்கு கட்டளையிடலாம் :-

(1) சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை ஆறாவது பிரிவின் கீழ், பதிவு செய்வதற்கான தேவையான தகமைகளை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதும் மற்றும்

(2) அமைச்சர் அவர்களினால் இந்நியதிச் சட்டத்தில் 24 ஆவது பிரிவின் பிரகாரம் தற்பொழுது வெளியிடப்பட்டுள்ள கட்டளைகளுக்கு ஒத்திசைவாக உள்ளதா என.

அறிக்கைகளை பெற்றுக் கொடுத்தல்.

9. எட்டாவது பிரிவில் குறிப்பிடப்படும் கட்டளை கிடைத்த நான்கு வாரங்களுக்குள் சம்பந்தப்பட்ட அறிக்கைகளை அவ் உத்தியோகத்தரால் ஆணையாளருக்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

ஆணையாளரினால் பரிசோதனையிடல்.

10. ஒன்பதாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கைகள் கிடைத்து ஒரு வாரத்திற்கிடையில் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தங்கியுள்ள பிள்ளைகளுடைய அதிக நலன் கருதி, கடமையாற்றுவதற்காகன வாய்ப்பு உள்ளனவா என விதிக்கப்பட்டுள்ள தரங்களுக்கு ஒத்திசைவானதா என, ஆறாவது பிரிவில் குறிப்பிடப்படும் தகமைகளை பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்ற விடயங்கள் தொடர்பாக ஆணையாளர் அவர்களினால் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு சென்று சோதனையிட முடியும்.

பதிவு செய்தல்.

11. பத்தாவது பிரிவில் குறிப்பிடப்படும் விசாரணையொன்றில் பின், ஆணையாளர் திருப்தியடைவாராயின், அச்சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை பரிசோதனை செய்த நாள் முதல், மூன்று மாதங்களுக்கிடையில், பதிவு செய்வதற்கும் மற்றும் உரிய நிபந்தனைகளுடன் ஒப்பந்தமொன்றை கைச்சாத்திடுவதற்கும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

பதிவு செய்யும் சான்றிதழ்.

12. (1) ஒன்பதாவது பிரிவில் குறிப்பிடப்படும் அறிக்கை கிடைத்த பின்பு ஆணையாளரின் பரிசோதனையின் மூலம் பதிவு செய்வதற்கான தகமைகளை பூர்த்தி செய்திருக்கின்ற சிறுவர் அபிவிருத்தி நிலையங்களோடு ஒப்பந்தமொன்றை கைசாத்திட்ட பின், அந் நிறுவனங்களுக்கு இங்கு இரண்டாவது உப அட்டவணையில் குறிப்பிடப்படும் மாதிரியின் பிரகாரம் பதிவுச் சான்றிதழ் ஒன்றை ஆணையாளரினால் வழங்க வேண்டும்.

(2) அவ்வாறு முதலாவது பதிவு, பதிவு செய்த நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும். அவ்மூவாண்டு நிறைவுபெற மூன்று மாதங்களுக்கு முன் நிலையத்தின் முகாமையாளரால், அது விடயம் பற்றி செய்யப்படும் கோரிக்கையின்படி சம்பந்தப்பட்ட பதிவை ஆண்டுதோறும் நீடிப்பதற்கான அதிகாரம் ஆணையாளருக்கு உண்டு. அவ்வாறு நீடிப்பது தொடர்பான ஒவ்வொரு கோரிக்கை தொடர்பாகவும் இந்நியதிச் சட்டத்தில் ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது போன்ற பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையவைகளாகும்.

(3) பதிவு செய்யப்படும் ஒவ்வொரு சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினதும் பெயர், முகவரி, பதிவிலக்கம் மற்றும் திகதி, சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்தி செல்கின்ற நிலையத்தின் பெயர், மற்றும் வேறு தேவைகள் ஏற்படும் என ஆணையாளரான கருதப்படுகின்ற தகவல்களையும் உட்படுத்தி பட்டியலிடுவதற்காக ஆணையாளரினால் பட்டியலொன்றை நடாத்திச் செல்லல் வேண்டும்.

பதிவு செய்ய முடியாதென அறிவித்தல்.

13. பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை ஆறாவது பிரிவில் குறிப்பிடப்படும் தகமைகளை பூர்த்தி செய்திராத சந்தர்ப்பத்தில் அச்சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை பதிவு செய்ய முடியாதென்பதற்கான காரணங்களுடன் ஆணையாளரினால் விண்ணப்பதாரிக்கு தெரிவித்து அனுப்ப வேண்டும்.

மேன்முறையீடு.

14. பதின் மூன்றாவது பிரிவில் குறிப்பிடப்படும் அறிவித்தலின் மூலம் திருப்தியடையாவிடின், சிறுவர் அபிவிருத்தி நிலைய முகாமையாளரால் அறிவித் நாளிலிருந்து முப்பது நாட்களுக்கிடையில் அதுபற்றிய மேன் முறையீடொன்றை ஆணையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

மேன்முறையீடு கள் பற்றி தீர் மானங்கள்.

15. பதின்நான்காவது பிரிவின் கீழ் மேன்முறையீடொன்றை கிடைத்து இரு வாரங்களுக்குள் ஆணையாளரினால் தனிப்பட்ட முறையில் சோதனையிட்டு கீழ் இடம்பெறும் தீர்மானங்களில் ஒன்றை மேற்கொள்ளல் வேண்டும்.

(1) பதிவு செய்ய முடியாவிடின் அதற்கான காரணங்களை முகாமையாளருக்கு மீண்டும் அறிவித்தல் ;

(2) மேன்முறையீட்டின் காரணங்களை கவனத்தில் கொண்டு திருப்தியடைய முடியுமென்றால் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்தல் ;

(3) ஆறாவது பிரிவில் குறிப்பிடப்படும் தகமைகளை பூர்த்தி செய்வதற்கு மூன்று மாதங்களுக்கு அதிகரிக்காத சலுகைக் காலத்தை பெற்றுக்கொடுத்தல்.

தீர்மானங்கள் நடைமுறைபடுத் தல்.

16. (1) மேற்படி 15 (1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானங்கள் காரணமாக அதிருப்தி அடையும் நிலையத்தின் உரிமையாளர் அல்லது முகாமையாளர் ஒருவரால் ஒரு மேன்முறையீட்டை மாத்திரம் ஆணையாளர் தீர்மானித்த நாள் முதல் ஒரு மாதத்திற்கிடையில் ''செயலாளர்'' என குறிப்பிடப்படும் ஊவா மாகாணத்தின் நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு விடயபொறுப்பான அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு முன்வைக்க முடியும்.

(2) பதினைந்தாவது பிரிவின் (3) இன் பிரகாரம் வழங்கப்படுகின்ற சலுகைக் காலம் நிறைவு பெற்ற பின் ஆணையாளரினால் மீள் விசாரித்து சம்பந்தப்பட்ட நிறுவனத்தை பதிவு செய்தல் அல்லது பதிவு செய்யாமை என்பது பற்றி தீர்மானிக்க வேண்டியதோடு அத் தீர்மானம் ஆணையாளரினால் முகாமையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

சிறுவர் அபி விருத்தி நிலைய மொன்றின் பதிவு இரத்துச் செய்தல்.

17. கீழ் குறிப்பிடுகின்ற ஓர் சந்தர்ப்பத்தில் தன்னால் அல்லது தன்னால் அதிகாரம் வழங்கப்படுகின்ற வேறொரு அதிகாரியால் நடாத்தப்படும் விசாரணையொன்றின் பின் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பதிவை இரத்துச் செய்வதற்கான அதிகாரம் ஆணையாளருக்கு உண்டு.

அதாவது

(1) சம்பந்தப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்தி செல்கின்ற தொண்டர் அமைப்பின் அங்கத்தவர்களுடைய யாப்பு ரீதியிலான கூட்டமொன்றுக்கு வருகை தந்து வாக்களிக்கின்ற பெரும்பான்மையினரின் வாக்குகளால் சம்மதிக்கப்படுகின்ற பிரேரணையொன்று மூலமாக சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்தி செல்ல முடியாதென தீர்மானிக்கப்பட்டால் மூடிவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதிக்கு மூன்று மாதங்களுக்கு முன்பு அது தொடர்பாக எழுத்துமூலமாக சம்பந்தப்பட்ட ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். அவ் எழுத்து மூலமான அறிவித்தல் ஆணையாளரினால் ஏற்றுக் கொண்டுள்ள சந்தர்ப்பத்தில்.

(2) முப்பத்தியாறாவது பிரிவின்கீழ் உரிய அதிகாரியொருவரை நியமிப்பதற்கு இடையூறு ஏற்படுகின்ற பட்சத்தில் அல்லது நியமிக்கப்பட்ட அதிகாரிக்கு தனது கடமைகளை முன்னெடுக்க முடியாத நிலமை ஏற்படும் போது.

(3) இருபத்தி நான்காம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் மூன்றாவது உப அட்டவணையில் இடம்பெறுகின்ற தரங்களுக்கு ஒத்திசைவாகவும் மற்றும் அவ்வப்போது விடுக்கப்படும் கட்டளைகள், பிரமானங்கள், நிபந்தனைகள் மற்றும் சுற்று நிருபங்களுக்கிணங்க சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்தி செல்வதற்கு நிர்வாகக் குழு ஏற்பாடு செய்யாத சந்தர்ப்பத்தில்.

(4) முப்பத்தி யொன்பதாவது பிரிவிற்கிணங்க சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கான புதிய நிர்வாகக் குழு ஒன்றை தெரிவு செய்ய முடியாத சந்தர்ப்பத்தில்.

(5) பதினோராவது பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திக் கொண்ட கட்டளைகள், ஒப்பந்தங்களை நிறைவேற்றத் தவறினால் அல்லது கைவிடப்பட்டால்,

பதிவை நிராகரிக்கப்பதற்கான அதிகாரம் ஆளுநர் அவர்களுக்கு உண்டு.

18. பதினேழாவது பந்தியின் பிரகாரம் ஏதேனும் ஒரு சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பதிவை இரத்துச் செய்ய வேண்டும் என்று ஆணையாளர் தீர்மானித்த பின், முப்பது நாட்களுக்குள் அது விடயம் பற்றி ஆணையாளரினால் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளருக்கு பதிவுத் தபாலில் அறிவிக்க வேண்டும். பதிவு செய்யப் பட்டதை இரத்துச் செய்யப்பட்டது.

19. பதினெட்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையாளரின் தீர்மானத்திற்கு அச்சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் அல்லது நிர்வாக குழு ஒத்துழைக்காத சந்தர்ப்பத்தில் அத்தீர்மானத்த திகதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் இடையில் முகாமையாளரால் மேன்முறையீடொன்றை ஆணையாளர் மூலம் செயலாளருக்கு பதிவுத் தபாலின் மூலம் முன்வைக்க முடியும். மேன்முறையீடு களை சமர்ப்பித் தல்.

(1) இப்பிரிவின் பிரகாரம் மேன்முறையீடொன்றை சமர்பபித்த சந்தர்ப்பத்தில் இருபதாம் பிரிவில் குறிப்பிடப்படுகின்ற செயலாளரின் தீர்ப்பு கிடைக்கும் வரை சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்திச் செல்வதற்கான அதிகாரம் முகாமையாளருக்கும் நிர்வாக குழுவிற்கும் உண்டு ஆணையாளரின் ஆலோசனையின் மீதும் மீளாய்வு மீதும் மாத்திரமே இத்தகைய பணிகளை மேற்கொள்ள முடியும்.

20. பத்தொன்பதாம் பிரிவின் பிரகாரம் மேன்முறையீடொன்றை பெற்றபின் கீழ் குறிப்பிடப்படும் வகையில் செயலாளர் கடமையாற்றல் வேண்டும் :- செயலாளரின் தீர்மானங்கள்.

(1) ஆணையாளருக்கு சமமான அல்லது அதற்கு மேல் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் இருவரை கொண்ட குழுவின் மூலமாக நடாத்தப்படும் விசாரணையின் பின் கீழ் குறிப்பிடப்படும் தீர்மானங்களில் ஒன்றை மேற்கொள்ளல் வேண்டும் :-

(அ) பதிவை இரத்துச் செய்தல் அல்லது உறுதி செய்தல் ;

(ஆ) ஆணையாளர் அவர்களுடைய தீர்மானம் தொடர்பாக செயலாளரினால் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வரை பதிவை இரத்துச் செய்யும் பணிகளை மூன்று மாதங்களுக்கும் ஒத்தி வைக்க வேண்டும்.

(2) (அ) முதலாவது உப பந்தியின் கீழ் செயலாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் மேன்முறையீடு கிடைத்த நாள் முதல் ஒரு மாதத்திற்கிடையில் முகாமையாளரினால் ஆணையாளருக்கு பிரதியொன்றுடன், செயலாளரினால் எழுத்துமூலமாக அறிவித்தல் வேண்டும் ;

(ஆ) மேற்குறிப்பிடப்படும் (1) ஆவது பிரிவின்கீழ் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு வழங்கப்படும் கால எல்லை நிறைவு பெற்றபின் செயலாளினால் மீள் விசாரணையொள்றை நாடத்தி இருபதாம் பிரிவின் பிரகாரம் (1) “அ” விற்கிணங்க செயற்படல் வேண்டும்.

(3 ) இவ் பிரிவின் கீழ் செயலாளரினால் வழங்கப்படும் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

21. இருபதாம் பிரிவின் 1 மற்றும் 2 உப பிரிவின் பிரகாரம் பதிவை இரத்துச் செய்த சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றில் வகிக்கின்ற, நீதிமன்ற கட்டளையை பெறாத தங்கியுள்ள அனைத்து பிள்ளைகள், பெற்றோர்கள் அல்லது பொறுப்பாளர்களிடம் பொறுப்பளித்தல், நீதிமன்றக் கட்டளை கிடைக்காத பிள்ளைகளை நீதிமன்றத்திற்கு முன்வைத்து அதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும். ஆண், பெண் இன மற்றும் மத ரீதியிலான வசதிகள் உள்ள ஏனைய பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு இடமாற்றம் செய்தல் ஆணையாளரினால் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறொரு நன்னடத்தை அலுவலரினால் மேற்கொள்ளல் வேண்டும். பதிவை இரத்துச் செய்த சந்தர்ப் பத்தில் மேற் கொள்ள வேண் டிய நடவடிக்கை கள்.

*பதிவை இரத்துச் செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் சொத்துக்களை பொறுப்பளித்தல்.*

22. பதிவை இரத்துச் செய்த சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றுக்கு அரசாங்கத்தினால், தொண்டர் அமைப்புகள் மூலம் நிறுவனங்களால், அல்லது நபர்கள் மூலமாக வழங்கப்பட்டுள்ள அசையும் மற்றும் அசையா சொத்துக்களை திணைக்களத்திற்கு பொறுப்பேற்றபதற்கு அல்லது அணையாளரினால் தீர்மானிக்கப்படும் பதிவு செய்யப்பட்ட வேறொரு சிறுவர் அபிவிருத்தி நிலையத்திடம் பொறுப்பளிப்பதற்கு ஆணையாளருக்கு முடியும்.

*நிர்வாகக் குழுவின் அமைப்பு.*

23. கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைக்கிணங்க அனைத்து சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்காக நிர்வாக குழுவொன்றையும் மற்றும் முகாமையாளர் ஒருவரையும் தெரிவு செய்தல் வேண்டும் :-

(1) அந் நிர்வாகக் குழு தலைவர், உபதலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர், சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் மற்றும் நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் ஏழுபேர் கொண்டு அமைந்திருக்க வேண்டியதுடன், இவ் அங்கத்தவர்களில் பெரும்பான்மையாக ஊவா மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருத்தல் வேண்டும். முகாமையாளர் வெளிநாட்டை சேர்ந்தவர் என்றால் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சம முகாமையாளர் ஒருவரை தெரிவு செய்தல் வேண்டும் ;

(2) நிர்வாகக் குழுவின் பொருளாளர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் அல்லது சம முகாமையாளர் இலங்கைப் பிரசையாக வேண்டும் ;

(3) சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் அல்லது சமகால முகாமையாளர் உட்பட ஏறத்தாள நிர்வாக குழுவை சேர்ந்த மூன்று அங்கத்தவர்கள் ஊவா மாகாணத்தை நிரந்திர வதிவிடமாக கொண்டிருத்தல் வேண்டும்.

(4) சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் உட்பட நிர்வாகக் குழு அங்கத்தவர்கள் அனைவரும் நீதிமன்றத்தில் குற்றவாளியாக தண்டனையை பெற்ற ஒருவராக இருத்தல் கூடாது.

*தரங்களை பிரகடனப்படுத்த வேண்டும் என்பதும் பின்பற்ற வேண்டும் என்பதும்.*

24. சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் சேவை நிலைமையை மேம்படுத்துவதற்கான குறைந்த பட்ச தரங்களை மற்றும் நிபந்தனைகள் மாகாண நன்னடத்தைகள் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் ஆணையாளரினால் கட்டளையிட முடியும். இக்கட்டளைகளை சுற்று நிருபங்களின் மூலம் அவ்வப்போது வெளியிடல் வேண்டும். சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் நிர்வாகக் குழு மற்றும் முகாமையாளர் அச் சுற்று நிருபங்களின் ஆலோசனைகளை பின்பற்றல் வேண்டும்.

*சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் உத்தியோகத்தர் குழுவொன்றிற்காக முகாமையாளர் நடவடிக்கை மேற்கொள்ளல்.*

25. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை பதிவுசெய்தல் தொடர்பான அனைத்து கடமைகளும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் சார்பாக நடைமுறைப்படுத்தப்படுகின்ற வேறு கடமைகள் தொடர்பாகவும் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால் இடம்பெறும் கடித கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளரினால் மாத்திரம் மேற்கொள்ள வேண்டும்.

*சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் உத்தியோகத்தர் குழு இருக்க வேண்டும் மற்றும் அவர்களின் தகமைகள்.*

26. நிர்வாகக் குழுவிற்கு மேலதிகமாக சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் பாதுகாப்பு வழங்கப்படுகின்ற பிள்ளைகளை பராமரிப்பதற்கென உத்தியோகத்தர் குழுவொன்றிருக்க வேண்டியதோடு, அவர்கள் ஏறத்தாள கீழ் இடம்பெறும் கல்வித் தகமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(1) பிரதான நிர்வாகியாக க. பொ. த. உயர்தரத்திற்கு தோற்றிய ஒருவராக இருத்தல் வேண்டும் ;
(2) சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும் ;
(3) அச்சிறுவர் இல்லத்திற்கு உரிய சமயத்தவராக இருத்தல் வேண்டும் ;
(4) பொறுப்புக்களை ஏற்றுக்கொள்வதற்குரிய குடும்ப சூழலுள்ளவராக இருத்தல் ;
(5) உடல் நலத்துடனும், உள நலத்துடனும், சுகாதார நலத்துடனும் கூடிய ஒருவராக இருத்தல் வேண்டும் ;
(6) தரமான நடத்தைகளை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

## III ஆம் பகுதி

## **சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கு உட்படுத்தல், மீளாய்வு, ஸ்தாபித்தல், நிர்வாகக் குழுவை செயழிலக்க செய்தல்**

*சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு பிள்ளைகளை சேர்த்துக் கொள்ளல்.*

27. (1) ஆணையாளரின் அனுமதி கிடைத்தால் அன்றி இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றுக்கு எந்த ஒரு பிள்ளையையும் உட்படுத்தல் தகாது. எவ்வாறாயினும் நியாயமான விடங்களை கவனத்திற் கொண்டு ஆணையாளரின் அனுமதியின்றி, ஒரு பிள்ளையை சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் சேர்ப்பதற்கான வாய்ப்பு நிர்வாகக் குழுவிற்கு உண்டு அவ்வாறு சேர்த்துக்கொள்ளக்கூடிய பிள்ளைகளின்

எண்ணிக்கையானது சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கென அனுமதிக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப 5% அளவை மீறிச் செல்லாமல் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் இவ்வாறு உட்படுத்தப்படும் பிள்ளைகள் தொடர்பாக ஒரு வாரத்திற்கிடையில், ஆணையாளரின் அனுமதியை பெற்றுகொள்ள வேண்டும்.

(2) ஏதேனும் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை பதிவு செய்யும் போது ஆணையாளரினால் விதிக்கப்பட்டுள்ள வயதெல்லைக்கு, ஆண், பெண் வேறுபாடு அல்லது மத ரீதியிலான வேறுபாடுகளுக்கு முரனாக எந்த ஒரு பிள்ளையையும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு உட்படுத்தல் தகாது. அவ்வாறாயினும் சேர்க்கப்படும் பிள்ளைகள் தொடர்பாக ஒரு கிழமைக்குள் ஆணையாளரின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

*ஸ்தாபித்தல் மற்றும் ஆலோசனைகளை பின்பற்ற வேண்டும். என்பது.*

28. பதிவு செய்யப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றில் எந்தவொரு பிள்ளையையும் பராமரித்தல் தொடர்பாகவும், பிள்ளைகளுடைய நலன்கருதி மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் தொடர்பாக ஆணையாளரினால் அல்லது நிலையப் பொறுப்பான நன்னடத்தை உத்தியோகத்தரினால் அல்லது சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் மீளாய்வு பணிகளுக்கென நியமிக்கப்பட்டுள்ள நன்னடத்தைகள் உத்தியோகத்தரினால் அல்லது வழங்கப்படும் ஆலோசனைகள் மற்றும் கட்டளைகள் பின்பற்றுவதற்கும், அவற்றை நிறைவேற்றுவதற்கும் சிறுவர் அபிவிருத்தி நிலைய முகாமையாளர் நிர்வாகக் குழு, அல்லது அலுவலர் குழு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

*ஒவ்வொரு மாணவரை பற்றியும் அறிக்கையொன்றை தயாரிக்க வேண்டும் என்பது.*

29. ஏதேனும் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை பதிவு செய்கின்ற சந்தர்ப்பத்தில், சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தங்கியுள்ள அனாதைகள், கைவிடப்பட்ட பிள்ளைகள், நிர்க்கதியற்ற பிள்ளைகள் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டவர்களா என பரிசோதித்து ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் வெவ்வேறாக தயாரிக்கப்படும் அறிக்கையொன்றை சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பாக அறிக்கை வழங்குகின்ற நன்னடத்தைகள் உத்தியோகத்தரினால் ஆணையாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

*சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கென மீளாய்வு.*

30. ஒவ்வொரு சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கும் மீயாய்வு பணிகளுக்காகவும் நன்னடத்தைகள் அலுவலர் ஒருவரை நியமித்தல் வேண்டும். நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் ஆணையாளரினால் சிறுவர் அபிவிருத்தி நிலைய மீளாய்வுகளுக்கு பணிகளுக்கான பொறுப்பதிகாரிக்கு, நிலையபொறுப்பான நன்னடத்தைகள் அலுவரினால் மற்றும் ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்படும். நன்னடத்தை உத்தியோகத்தருக்கு மற்றும் ஆணையாளரினால் அதிகாரம் வழங்கப்படும் திணைக்களத்தின் உயரதிகாரியொருவரால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்குள் புகுந்து சோதனையிடலாம். அவ்வாறான விசாரணைக்கு சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாகக் குழு, மற்றும் ஏனைய எந்த ஒரு நபருக்கும் இடையூறு ஏற்படுத்த முடியாது.

வழமையான பாதுகாப்பு பணிகளை தவிர உள்ளக பரிசோதனை பணிகளில் நன்னடத்தைகள் ஆணையாளரின் பூரண அனுமதியின்றி எந்த ஒரு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனத்தில் அல்லது ஏற்பாட்டு உத்தியோகத்தருக்கு உள்ளக பரிசோதனைகளில் ஈடுபடக்கூடாது.

*தங்குமிட வசதிகளை பெற்று கொடுத்தல்.*

31. நடாத்திச் செல்லப்படுகின்ற சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றில் தங்கியுள்ள பிள்ளைகளை தொடர்ந்தும் தடுத்து வைத்து கொள்ளல் மற்றும் ஸ்தாபித்தல் ஆகியவை ஆணையாளரின் அனுமதிக்கிணங்க மேற்கொள்ளல் வேண்டும்.

(1) இருபத்தியொன்பதாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க கிடைத்த ஏதேனும் அறிக்கையின் கருத்துகளுக்கிணங்க அச்சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தங்கியுள்ள கைவிடப்பட்ட நிர்க்கதியற்ற, துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சந்தர்ப்பத்தில் ஆணையாளருக்கு அறிவித்து அப்பிள்ளைகள் சேர்க்கப்பட்ட திகதி முதல் மூன்று வருடகாலம் வரை அந் நிலையத்தில் வைத்துக்கொள்ள முடியும். அதேபோன்று தேவைக்கேற்ப ஆணையாளரால் அக்காலத்தை நீடிக்க அல்லது குறைப்பதற்கு முடியும்.

(2) இருபத்தியொன்பதாம் பிரிவில் குறிப்பிடப்படும் அறிக்கைகளை அடிப்படையாக கொண்டு அனாதைகள், கைவிடப்பட்ட பிள்ளைகள், நிர்க்கதியற்றவர்கள் மற்றும் துஷ்பிரயோகத்திற்கு இலக்கானவர்கள் அல்லாதவர்கள் என தீர்மானிக்கின்ற பிள்ளைகளை அவரால் நியமிக்கப்படும் நாள் முதல் மூன்று மாதங்களுக்கிடையில் ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகளை முகாமையாளரால் மேற்கொள்ளல் வேண்டும்.

(3) ஸ்தாபித்தல் குழுவின் தீர்மானங்களை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முகாமையாளரால் மேற்கொள்ள வேண்டும்.

தகவல்களையும், அறிக்கைகளையும் வழங்குதல்.

32. ஆணையாளருடைய அல்லது நிலையப்பொறுப்பான அலுவலருடைய அல்லது மீளாய்வு பொறுப்புகளுக்கு பொறுப்பான நன்னடத்தைகள் உத்தியோகத்தர் அல்லது எழுத்து மூலமான அறிவித்தலின் மூலம், கோரப்படும் தகவல்கள் மற்றும் அறிக்கைகளை அறிவித்தல் அக்காலத்திற்குள் சரியான முறையில் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முகாமையாளரினால் மேற்கொள்ளல் வேண்டும்.

இறுதி அறிவித்தல்.

33. இருபத்தியெழாவது, முப்பத்தியொராம் பிரிவுகளின் கீழ் ஏதேனும் ஒரு சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் முகாமையாளர் நிர்வாகக் குழு மற்றும் உத்தியோகத்தர் குழு செயற்படாத சந்தர்ப்பத்தில் தேவையான முறையில் கடமையாற்றுவதற்காக இறுதி திகதியை நியமித்த எழுத்து மூலமான அறிவித்தலொன்றை பதிவுத் தபாலின் மூலம் முகாமையாளருக்கும், நன்னடத்தைகள் ஆணையாளருக்கும் அறிவித்தல் வேண்டும். அவ் அறிவித்தலுக்கிணங்க கடமையாற்ற தவறுகின்ற பட்சத்தில் அதற்கான காரணங்களை எழுத்து மூலமான தெளிவுபடுத்தலொன்றை முகாமையாளரினால் ஆணையாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஆணையாளரினால் பரிசோதனை நடாத்தல்.

34. முகாமையாளரின் தெளிவுபடுத்தலொன்று கிடைத்த பின்பு ஆணையாளரால் அல்லது அவரால் அனுமதி வழங்கப்படுகின்ற இரண்டு நன்னடத்தைகள் அலுவலர்களை கொண்ட குழுவின் மூலம் நடாத்தப்படும் விசாரணையின் பின் ஆணையாளரினால் பின்வரும் தீர்மானங்களில் ஒன்றை மேற்கொள்ள முடியும் :-

(1) இருபத்தி இரண்டாவது பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் இருபத்தி யேழாம், முப்பத்தி ஓராம் பிரிவுகளின் கீழ் கடமையாற்றுமாறு அறிவித்து சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு சம்பந்தப்பட்ட முகாமையாளர் அல்லது நிர்வாகக் குழுவின் அல்லது அலுவலர் அவர்களில் எவரேனும் ஒருவருக்கு கட்டளையிடலாம்.

(2) இருபத்தியேழாம் பிரிவின் கீழ் வழங்கப்படும் ஆலோசனைகள் அல்லது கட்டளைகள் தொடர்பாக அவரினால் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கிணங்க அவ் ஆலோசனைகளையும் கட்டளைகளையும் பின்பற்றல் வேண்டும்.

இன்றேல்,

(3) இருபத்தியேழாம் பிரிவின் கீழ் ஆணையாளரினால் அல்லது நிலையப்பொறுப்பான நன்னடத்தைகள் உத்தியோகத்தரினால் அல்லது மீளாய்வு விடயங்களுக்கு பொறுப்பான பொறுப்பதிகாரியினால் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளை பின்பற்றல் அல்லது கட்டளைகளை நிறைவேற்றல் அல்லது தேவை ஏற்படவில்லை என்பது அல்லது முப்பத்தியோராவது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள தகவல்கள் அல்லது அறிக்கைகளை பெற்று கொடுக்க தேவையற்றதென்பதை அறிவித்தல் வேண்டும்.

(4) முப்பத்தி இரண்டாவது பிரிவின் கீழ் தெளிவுபடுத்திய நாள் முதல் முப்பது நாட்கள் செல்வதற்கு முன்பு நன்னடத்தைகள் ஆணையாளரினால் தனது தீர்மானத்தை நன்னடத்தை அலுவலருக்கான பிரதியொன்றுடன் முகாமையாளருக்கு பதிவு தபாலின் மூலம் அறிவித்தல் வேண்டும்.

35. முப்பத்தி நான்காவது பிரிவின் கீழ் நன்னடத்தைகள் ஆணையாளரினால் வழங்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

ஆணையாளரின் தீர்வே இறுதி தீர்வாகும் என்பது.

36. ஏதேனும் ஒரு சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமைளாயர், நிர்வாகக் குழு அல்லது அலுவலர் குழு அல்லது முப்பத்தி இரண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதி த் திகதி நிறைவு பெறுவதற்கு முன்பு இருபத்தி ஏழாம் பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளை பின்பற்றாத மற்றும் விதிகளை நிறைவேற்றாத சந்தர்ப்பத்தில் அல்லது முப்பத்தியொராவது பிரிவில் குறிப்பிடப்படும் தகவல்களையும் அறிக்கைகளையும் சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில் அல்லது முப்பத்தி மூன்றாவது பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க நன்னடத்தைகள் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தீர்மானங்களுக்கு இணங்க செயற்படுவதை கைவிடும் சந்தர்ப்பத்தில் அல்லது ஏதேனும் அபிவிருத்தி நிலையமொன்றின் முகாமையாளரினதும் நிர்வாகக்குழுவினதும் அதிகாரங்களை இழக்கச் செய்து சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்திச் செல்வதற்கென உரிய அதிகாரம் உள்ள அதிகாரியொருவரை தெரிவு செய்வதற்கான அதிகாரம் நன்னடத்தைகள் ஆணையாளருக்கு உண்டு.

(1) ஆணையாளரினால் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை செயழிலக்க செய்கின்ற சந்தர்ப்பத்தில் மாகாண அரச சேவையின் உயரதிகாரியொருவரை அதிகாரியாக தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

37. ஆணையாளரினால் முப்பத்தி ஆறாவது பிரிவின் கீழ் சிறுவர் அபிவிருத்தி நிலையம் தொடர்பாக உரிய அதிகாரியொருவரை தெரிவு செய்த பின் :- முகாமையாளர் அல்லது நிர்வாகக் குழு சிறுவர் அபி விருத்தி நிலையத் தின் கடமை களோடு இணை வதுதகாது என்பது.

(1) சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் நிர்வாகக் குழு, முகாமையாளர் அல்லது அது தொடர்பான விடயங்களில் பங்குபற்றல் அல்லது இணைத்தல் தகாது என்பது.

(2) ஆணையாளருடைய எழுத்துமூல அனுமதியை பெற்றுக் கொள்ளளின்றி, முகாமையாளர் நிர்வாக குழுவின் எவரேனும் ஒருவர் மற்றும் அலுவலர் குழுவின் எவரேனும் ஒருவர் அச்சிறுவர் அபிவிருத்தி நிலையம் அமைந்துள்ள சூழலுக்குள், கட்டிடமொன்றுக்கு எந்த வகையிலும் நுழைய கூடாதென்பது.

38. முப்பத்தி ஆறாம் பிரிவின்கீழ் உரிய அதிகாரியொருவரை தெரிவு செய்த சந்தர்ப்பத்தில் ஆணையாளரினால் முகாமையாளருக்கு எழுத்து மூலமாக அறிவிக்க வேண்டியதோடு, அக்கடிதம் கிடைத்த உடன், அச்சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகாமையாளர் அல்லது நிர்வாகக் குழு அல்லது அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஒருவர் அல்லது உரிமையாளர் அல்லது அலுவலர் குழுவினால் அல்லது சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்குரிய அனைத்து காகிதாதிகளையும் நிலையான சொத்துக்களையும், அசையும் சொத்துக்களையும் நிதி மற்றும் வங்கி கணக்குகளுடனான நிறுவனத்தின் அநுபவ உரிமையை உரிய அதிகாரிக்கு எழுத்து மூலமாக பொறுப்பளிக்க வேண்டும். சொத்துக்களை பொறுப்பளித்தல்.

39. அதிகாரத்தை இழக்கச் செய்த நிர்வாக குழு மற்றும் முகாமையாளர் சார்பாக புதிய நிர்வாகக் குழுவொன்றையும், முகாமையாளரையும், உரிய அதிகாரியை நியமித்த நாள் முதல் மூன்று மாதங்களுக்கிடையில் ஆணையாளரினால் தெரிவு செய்தல் வேண்டும். புதிய முகாமைத் துவ குழு வொன்றை தெரிவு செய்தல்.

(1) புதிய நிர்வாகக்குழு மற்றும் முகாமையாளர் ஒருவரையும் தெரிவு செய்வதற்காக சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்தி சென்ற அமைப்பின் அனைத்து அங்கத்தவர்களையும் ஒன்று கூடுமாறு ஆணையாளரினால் எழுத்து மூலமாக அறிவித்தல் வேண்டும். அங்கு நடாத்தப்படும் இரகசிய வாக்கெடுப்பின் மூலமாக முகாமையாளர் மற்றும் நிர்வாகக் குழுவொன்றையும் தெரிவு செய்தல் வேண்டும்.

(2) இப்புதிய முகாமையாளரையும் மற்றும் நிர்வாகக் குழுவையும் தெரிவு செய்யும் போது முன்னால் முகாமையாளரை அல்லது நிர்வாக குழுவை மீண்டும் தெரிவு செய்தல் தகாது. புதிய அலுவலர் குழுவை தெரிவு செய்யப்பட்டு மூவாண்டுகள் செல்லும் வரை அவர்களால் புதிய பதவிகளுக்கான நியமனங்களை பெற முடியாது.

(3) முதலாவது உப பிரிவின் கீழ் நியமிக்கப்படும் முகாமையாளருக்கு சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் உள்ள அனைத்து காகிதாதிகளிலும் நிலையான மற்றும் அசையும் சொத்துக்களினதும் அனைத்து பொறுப்புக்களையும் புதிதாக தெரிவு செய்யப்படும் புதிய முகாமையாளரிடம் பொறுப்பளித்தல் வேண்டும். அவ்வாறு பொறுப்பேற்கும் நாள் முதல் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்தி செல்வதற்கான அதிகாரம் புதிய முகாமையாளருக்கு மற்றும் நிர்வாக குழுவிற்கும் உண்டு.

(4) முதலாவது உப பிரிவிற்கிணங்க கடமைகளை நிறைவேற்றி கொள்வதற்கான வாய்ப்பு ஆணையாளருக்கு கிடைக்காதிருப்பின் அதனை நிறைவேற்றிக் கொள்ளும் வரை மேற்குறிப்பிடப்பட்டுள்ள மூன்று மாத காலம் நிறைவுபெற்று சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை உரிய அதிகாரியால் வழி நடாத்திச் செல்லல் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பிள்ளைகளை ஸ்தாபிப்பதன் அதிகாரம் ஆணையாளருக்கு உண்டு.

## IVஆம் பகுதி

### **பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையம்**

40. ஐந்து வயதிற்கு குறைந்த அனாதைகள், கைவிடப்பட்ட, நிர்க்கதியற்ற பிள்ளைகளை தங்கவைத்து பாதுகாப்பதற்காக பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையமொன்றிருக்க வேண்டியதோடு, அதுவானது மாகாண நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் ஆணையாளரின் கீழ் நிர்வகிக்கப்பட வேண்டும். மாகாண சபைக் கென அபிவிருத்தி சிறுவர் நிலைய மொன்று இருத்தல் வேண்டும்.

ஒரு பிள்ளை அனைதையாகியுள்ளதாக அல்லது மருத்துவ மனைக்குட்படுத்த வேண்டும் என்பது.

41. ஆறு வயதுக்கு குறைந்த பிள்ளையொன்று அனாதையாக உள்ளதென்று அல்லது கைவிடப்பட்டுள்ளதாக எவரேனும் ஒருவர் அறிந்து கொண்ட உடன் அது விடயம் குறித்து பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அல்லது வேறு பொலிஸ் உத்தியோகத்தரிடம் அல்லது நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தருக்கு அல்லது கிராம சேவை உத்தியோகத்தர் ஒருவரிடம் அறிவித்த பின்பு அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் அரச மருத்துவ மனையொன்றில் உட்படுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு உட்படுத்த வேண்டும் என்பது.

42. (1) நாற்பத்தி ஓராவது பிரிவின் கீழ் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட ஒரு பிள்ளைக்கு மருத்துவ கிசிக்சையளித்த பின் சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரியினால் அல்லது அவரால் அனுமதி வழங்கப்பட்டுள்ள வேறொரு அலுவலரால், ஆணையாளரின் அனுமதியைபெற்ற பின்பு அப்பிள்ளையை பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையத்தில் உற்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அத்தகைய ஒரு பிள்ளையை முறையான வகையில் பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையத்திடம் பொறுப்பளிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது ஆணையாளரின் பொறுப்பாகும்.

(2) இவ்வாறானதொரு பிள்ளை துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்பட்டிருந்தால் அது வியடம் குறித்த நீதிமன்ற கட்டளைச் சட்டமொன்று தேவைப்படும் பட்சத்தில் இதனை சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலையத்திடம் அறிவிப்பதற்கு மருத்துவ மனையின் பொறுதிப்பதிகாரியினால் அல்லது அவரால் அனுமதி வழங்கப்பட்டவேறொரு அலுவரால் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

பிறப்பை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், பரிசோதனை அறிக்கை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பது.

43. (1) மருத்துவமனையில் பிறந்து அனாதை நிலைக்கு தள்ளப்பட்ட அல்லது கைவிடப்பட்ட ஒவ்வொரு பிள்ளையினதும் பிறப்பை பதிவு செய்தல் தொடர்பில் அடிப்படை மருத்துவ மனையயொன்றின் பிரசவ மற்றும் நரம்புகள் பற்றிய மருத்துவரினால் பிள்ளையை விடுவிப்பதற்கு முன் ஏற்பாடு செய்தல் வேண்டும். அப்பிள்ளையை பொறுப்பேற்றும் சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையத்திடம் உட்படுத்தினால் பிள்ளையின் பிறப்பை பதிவு செய்யப்பட்டுள்ளதா என ஆராய்ந்து பதிவு செய்யாதிருப்பின் பிறப்பை பதிவு செய்ய வேண்டிய நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் ஆணையாளரின் பொறுப்பாகும்.

(2) மருத்துவ மனையல்லாத ஒரு இடத்தில் கைவிடப்பட்ட ஓர் பிள்ளை தொடர்பில் அப்பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் இல்லெயென தெரிந்து கொண்ட உடன் அல்லது அப் பிறப்புச் சான்றிதழை பெற்று கொள்வதற்கான அணுகு முறையொன்று இல்லை என கருதும் போது அப்பிள்ளைக்கான பிறப்புச் சான்றிதழை பெற்றுக்கொடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் ஆணையாளரின் பொறுப்பாகும்.

44. பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையத்திற்கு உட்படுத்துகின்ற ஒவ்வொரு பிள்ளைகள் பற்றிய விவரங்கள் உள்ளிட்ட விரிவான அறிக்கையொன்றை ஆணையாளரிடம் கோட்டத்திற்கு பொறுப்பான நன்னடத்தைகள் அதிகாரியால் அல்லது ஆணையாளரினால் அனுமதி சம்பந்தப்பட்ட பிரிவை சேர்ந்த நன்னடத்தைகள் அதிகாரியால் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதேபோன்று பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையத்திற்கு உட்படுத்தப்படும் ஒவ்வொரு பிள்ளையை பற்றிய விரிவான அறிக்கையொன்றை உட்படுத்தப்பட்ட நாள் முதல் 30 நாட்களுக்கிடையில் ஆணையாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

ஸ்தாபித்தல்.

45. மாகாண சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு உட்படுத்தப்படும் ஸ்தாபித்தல் பிள்ளைகளுடைய ஸ்தாபித்தல் பணிகள் குழுவின் சிபாரிசு அடிப்படையில் ஆணையாளரால் மேற்கொள்ளல் வேண்டும்.

பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர் குழுவை நிறுவுதல்.

46. நாற்பதாவது பிரிவீற்கிணங்க நிறுவப்படுகின்ற பொறுப்பேற்றல் சிறுவர் அபிவிருத்தி நிலை உத்தியோகத்தர் குழு கீழ் குறிப்பிடப்படுகின்ற வகையில் இடம்பெறல் வேண்டும்.

1. நிலைய பொறுப்பான மேற்றன்
2. உப மேற்றன்
3. இல்லத்து மாதர்
4. முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்
5. சமயலாளர்
6. சாரதி
7. சிற்றூழியர்
8. சுகாதார பாதுகாப்பு ஊழியர்.

எதிர்வரும் காலத்தில் ஏற்படும் தேவைக்கிணங்க உத்தியோகத்தர் குழுவின், அலுவலர் குழுவின் மாற்றங்களை செய்து கொள்வதற்காக அமைச்சின் செயலாளர் அவர்களுடைய பூர்வாங்க அனுமதிக்கிணங்க நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை ஆணையாளருக்கு அனுமதி உண்டு.

## V ஆம் பகுதி

## தவறுகளும் தண்டனைகளும்

47. (1) சிறுவர் அபிவிருத்தி நிலைய முகாமையாளரினால் அல்லது நிர்வாக குழுவின் எவரேனும் ஒருவரால் அல்லது அலுவலர் குழுவின் அல்லது சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்று அல்லது பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையம் அல்லது இருக்கும் எந்தவொரு பிள்ளையையும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தல், வேறு தீய செயல்களுக்காக பயன்படுத்தல் அல்லது அதற்கு அனுமதி வழங்கல், உதவி செய்தல் அல்லது அதற்கு அதிகாரம் அளித்தல் என்பவற்றிற்கு இடமளிப்பதானது தவறான செயலாகும். துஷ்பிரயோகத்திற்கென பயன்படுத்த தகாது என்பது.

(2) இந்நியதிச் சட்டத்திற்கிணங்க நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஆணையாளருடைய அதிகாரங்கள் நடைமுறைக்கு வருகின்ற கால எல்லைக்குள் அதற்குட்படுத்தப்பட்ட ஒவ்வொரு பிள்ளையையும் ஏதேனும் ஒரு தரப்பினால் வியாபார நோக்கத்துடன், விளம்பரங்களுக்கென பயன்படுத்தப்படுமாயின் அவ்வாறு செய்வதற்கு முன்பு பெற்றோர்களிடமிருந்து அல்லது சட்டப்பூர்வமான பொறுப்பாளரிடமிருந்து அல்லது ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பூர்வ எழுத்துமூலமான அனுமதியின் அடிப்படையில் மாத்திரமே இடம்பெறல் வேண்டும். பிழைசெய்வதற்கான தண்டனை.

48. (1) பதிவு செய்வதற்கு முன்பு அல்லது பதிவு செய்த பின்பு அல்லது ஏதேனும் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றின் முகாமையாளரால் அல்லது நிர்வாகக் குழுவின் எவரேனும் ஒருவரால் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் நியமனங்களுக்கிணங்க ஏதேனும் அறிக்கையொன்றை அல்லது தகவல்கள் பெற்று கொடுப்பதை தவறவிட்டால், தன்னால் வெளியிடப்படும் ஏதேனும் அறிக்கையொன்றுக்கு அல்லது தகவலொன்றுக்கு அல்லது தெரிந்து கொண்டே போலியான விடயங்களை உட்படுத்துகின்ற அல்லது இந்நியதிச் சட்டத்தில் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட ஏதேனும் கட்டளையொன்று அல்லது நியமனங்களை அல்லது திட்டங்களுக்கு அல்லது ஏற்பாடுகளை துண்டிக்கின்ற ஒவ்வொருவருக்கும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் மேற்குறிப்பிடப்பட்டவைகள் தவறாகும். தவறுகளும் தண்டனைகளும்.

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஏதேனும் ஒரு தவறுக்காக விசேட தண்டனையொன்றை விதித்து அதற்கான ஏற்பாடுகளை செய்திராத சந்தர்ப்பங்களில் அக் குற்றத்தில் ஈடுபடுகின்ற அனைவருக்கும் நீதிவான் நீதிமன்ற நீதியரசர் ஒருவர் முன்னால், விதிக்கப்படுகின்ற சிறிய வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாக்கப்பட்டால் ஒரு இலட்சம் ரூபாவிற்கு அதிகரிக்காத அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத ஐந்து ஆண்டுகளுக்கு அதிகரிக்காத காலத்திற்கு சிறைக்கு அனுப்புவதற்கு அத்தண்டனை அல்லது சிறை அந்த தண்டனையை அனுபவித்தல் போன்ற இரண்டு தண்டனைகளுக்கு அல்லது கீழ்பட வேண்டும்.

(3) பதிவு சான்றுதழின்றி சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை நடாத்தி செல்கின்ற ஒரு நபர் அல்லது நபர்கள் அல்லது எவரேனும் ஒரு குழு அல்லது ஏதேனும் ஒரு அமைப்பு இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமொன்றில் ஈடுபடுவதுடன் அக்குற்றம் தொடர்பாக நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர முடியும். அதன் ஊடாக குற்றவாளி என கருதப்படுகின்றவர்களுக்கு அல்லது குழுவொன்றுக்கு அல்லது ஓர் அமைப்பை சேர்ந்த ஒருவருக்கோ ஐயாயிரம் ரூபாவைவிட அதிகரிக்காத அபராதத்திற்கு அல்லது ஆறு மாதங்களை அதிகரித்து செல்லாத காலம் போன்ற இரண்டு தண்டனைகளில் ஒரு தண்டனைக்கு சிறைவாசம் அனுப்புதல் அல்லது இரு வகைகளிலும் தண்டனையை அனுபவிக்கலாம்.

(4) ஒரு குழுவினால் நியதிச் சட்டத்தின் கீழ் தவறு செய்த போது -

(அ) அந்நபர்கள் குழு கூட்டுத்தாபனமொன்றை சேர்ந்தவர்களாயின் அக்கூட்டுத்தாபனத்தில் ஒவ்வொரு பணிப்பாளரும், ஒவ்வொரு உத்தியோகத்தரும் ;

(ஆ) அக்குழு வியாபார நிறுவனமொன்றை சேர்ந்தவர்களாயின், அவ்வியாபார நிறுவனத்தின் ஒவ்வொரு பங்குத்தாரரும் ;

(இ) அக்குழு சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை பராமரிக்கின்ற நிர்வாகக் குழுவொன்றால் அதன் ஒவ்வொரு அங்கத்தவரும்,

அத்தவறுக்கு குற்றவாளியாக்கப்படுவார். அவ்வாறாயினும் அத்தவறை செய்தது தன்னை அறியாத அல்லது அச்சம்பவத்தை தவிர்ப்பத்ற்காக தன்னால் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்பட்டதாக அக்கூட்டுத்தாபன பணிப்பாளர் ஒருவரினால், உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது வியாபார நிறுவனத்தின் பங்குதாரரினால் அல்லது நிர்வாகக் குழுவின் அங்கத்தவரினால் நிருபிக்கப்படும் பட்சத்தில், அக்குற்றத்திற்கான குற்றவாளியாக கருதல் தகாது.

(5) இந்நியதிச் சட்டத்தின் கீழ் நீதி மன்றத்தினால் குற்றவாளியாக தீர்மானிக்கின்ற சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையத்தின் முகாமையாளர் ஒருவருக்கு, நிர்வாக குழு அங்கத்தவருக்கு, அலுவலர் குழுவின் நபரொருவருக்கு எதிர்வரும் காலத்தில் எந்தவொரு சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றில் பதவியொன்றை அல்லது முகாமையாளர் பதவியொன்றை ஏற்க முடியாது.

## VI ஆம் பகுதி

## நிதி ஒதுக்கீடுகளை பெற்றுக்கொள்ளலும் கணக்காய்வும்

ஒதுக்கீடுகளை வழங்குதல்.

49. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ் அமைச்சின் நிறுவனங்களுக்கு தேவையான நிதி ஒதுக்கீடுகளை மாகாண சபை வருடாந்த நிதி பிரகடனத்தின் மூலம் வழங்கப்படும் ஒதுக்கீடுகளிலிருந்தும் மதிப்பீடுகள் மூலமாகவும், உதவிகள், மற்றும் வழங்கீடுகள் மூலமாகவும் கிடைக்கின்ற ஒதுக்கீடுகள் மூலமாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.

(2) இந்நியதிச் சட்டத்திற்கு உரிய கணக்காய்வு விவகாரங்கள் தொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, மாகாண சபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் உரித்துடையதாகும்.

## VII ஆம் பகுதி

## நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் அமைப்பும் அதிகாரங்களும்

அலுவலர் குழு.

50. ஆணையாளருக்கு உதவியாக போதியளவிலான நன்னடத்தை அலுவலர்கள் உட்பட உரிய உத்தியோகத்தர்கள் குழு ஒன்றிருக்க வேண்டும்.

அதிகாரங்களை வழங்க முடியும் என்பது.

51. இந்நியதிச் சட்டத்தின் பிரகாரம் கடமையாற்றும் போது ஆளுநருக்கு உரித்தான அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றல் போன்ற பணிகளை நன்னடத்தைகள் அலுவலர்களுக்கு எழுத்துமூலம் பொறுப்பளிக்க முடியும்.

பராமரிப்பு உதவிகளை செலுத்தல்.

52. (1) இந்நியதிச் சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்படுகின்ற சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையமொன்றின் பாதுகாப்பை பெறுகின்ற பிள்ளையின் சார்பாக கணிக்கப்படுகின்ற பராமரித்தல் உதவி பணத்தை செலுத்தவேண்டியதோடு, சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை பதிவு செய்த நாள் முதல், பன்னிரெண்டு மாதங்கள் செல்லும்வரை பராமரிப்பு உதவி நிதியை பெறுவதற்கு உரிமை கிடையாது.

(2) இவ் பராமரிப்பு நிதியை அவ்அவ்போது திருத்துவதற்கான அதிகாரம்.

கொடை நிதியை வழங்குதல்.

53. இந்நியதிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்காக கட்டிடங்களை நிர்மாணித்தல் உபகரணங்களை பெற்றுக்கொள்ளல் போன்ற பணிகளுக்கென உரிய முறையில் கொடை நிதியை கொடுக்க முடியும்.

வருடாந்த நிதி பிரகடனங்களை சமர்ப்பிக்க வேண்டும் என்பது.

54. சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை நடாத்தி செல்லப்படும் ஏதேனும் ஒரு அமைப்பில், அரை அரசாங்க, எந்நிறுவனமொன்றில், அரச நிறுவனமொன்றில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குகளால் வருடாந்தம் தெரிவு செய்கின்ற முகாமையாளர் ஒருவரினால் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு ஏற்ற வருடாந்த நிதி பிரகடனமொன்றை தயாரிக்க வேண்டியதோடு, முகாமையாளரால் அப்பிரகடனத்தை அடுத்த ஆண்டு சனவரி மாதம் முப்பத்திஓராம் திகதிக்கு முன் ஆணையாளிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஒழுங்குவிதிகளை விதித்தல்.

55. இந்நியதிச் சட்டத்திற்கேற்ற பிரமானங்களை விதிப்பதற்கான அதிகாரம் அமைச்சர் அவர்களுக்கு உண்டு.

இந்நியதிச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் உட்பட நியதிச் சட்டத்தின் நோக்கங்களை முன்னெடுக்க கூடிய விடயங்கள் தொடர்பாக அமைச்சரினால் ஒழுங்க விதிகளை விதித்தல் வேண்டும்.

(1) சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான தரங்களை தீர்மானித்தல்.

(2) சிறுவர் அபிவிருத்தி நிலையத்தினால் நிலையங்களுக்கேற்றவாறும், தங்கியுள்ளவர்களுக்கு தகுந்தவாறும் கணக்குகளை நடாத்திச் செல்லல்.

56. அமைச்சரினால் விதிக்கப்பட்ட ஒவ்வொரு ஒழுங்குவிதிகளையும் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதோடு, துரிதகதியில் மாகாண சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

57. மாகாண சபையால் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகளை அனுமதித்தல், திருத்தம் செய்தல் மற்றும் மாற்றம் செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வாய்ப்பு உள்ளதுடன் அது தொடர்பான விளம்பரம் ஒன்றை வர்த்தமானியில் வெளியிடுதல் வேண்டும்.

58. அமைச்சர் அவர்களால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளை மாகாண சபையால் அனுமதித்தல், திருத்துதல், மாற்றுதல் பொன்ற விடயங்களின் போன்று அவ் ஒழங்குவிதிகளின் கீழ் அதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கு அநியாயம் ஏற்படக்கூடாது.

59. சொற்கள் தொடர்பில் வேறொரு வகையில் விளக்கமளித்தல் தேவைப்படுமாயின் இந்நியதிச் சட்டத்தில்– சொற்கள் பற்றிய விளக்கமளித்தல்.

“மாகாண சபை” என்று ஊவா மாகாணத்தின் மாகாண சபையை கருதப்படும்.

“ஆளுநர்” என்று ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்கள் எனக் கருதப்படுவார்.

“அமைச்சர்” என்று ஊவா மாகாணத்தின் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் சேவைகள் விடயம் பொறுப்பான அமைச்சர் என கருதப்படும்.

“செயலாளர்” என்று சமகால ஊவா மாகாணத்தின் மாகாண சபை நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு விவகாரங்கள் பொறுப்பான அமைச்சின் செயலாளரை கருதப்படும்.

“ஆணையாளர்” என்று ஊவா மாகாணத்தின் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் ஆணையாளரை கருதப்படுகின்றது.

“நன்னடத்தைகள் அலுவலர்” என்று 1944 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, குற்றவாளிகளை நன்னடத்தைகள் பிரிவிடம் பொறுப்பேற்றும் கட்டளை சட்டத்தில் பதினேலாவது பிரிவின் கீழ் தெரிவு செய்யப்பட்ட அலுவலர் (அதிகாரி) ஒருவர் என கருதப்படுவார்.

‘உரிய அதிகாரி” என்று ஊவா மாகாண நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவையின் ஆணையாளரினால் தெரிவு செய்யப்படும் ஊவா மாகாணத்தின் மாகாண சபை அர சேவையில் ஈடுபட்டுள்ள உயரதிகாரியொருவரை கருதப்படும்.

“பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையம்” என்று அனாதைகள், கைவிடப்பட்ட நிர்க்கதி உள்ள மற்றும் துஷ்பிரயோகத்திற்கு இலக்கான பிள்ளைகளை தங்க வைத்து பாதுகாப்பதற்காக ஊவா மாகாணத்தின் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் மூலமாக நடாத்தி செல்லப்படும் நிறுவனமொன்றை கருதப்படுகின்றது.

“சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள்” என அனாதைகள், கைவிடப்பட்ட பிள்ளைகள், நிர்க்கதியற்ற மற்றும் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட பீள்ளைகளை பொறுப்பேற்றல், அவர்களை தங்க வைத்தல், அவர்களுக்காக பாதுகாத்தல் என்பவற்றுக்கென பதிவு செய்யப்பட்ட தொண்டர் இயக்கங்கள் மூலமாக நடாத்தி செல்லப்படுகின்ற அனைத்து வகையிலான இல்லங்களும், அபிவிருத்தி நிலையங்கள் மற்றும நீதிமன்றத்தின் மூலமாக பெறப்படும் அனாதைகள், கைவிடப்பட்டவர்கள், நிர்க்கதியற்றவர்கள், துஷ்பிரயோகத்திற்கு உள்ளான பிள்ளைகள், கர்ப்பிணி பிள்ளைகள் மற்றும் சிறுவர் தாய்மார்கள் பொறுப்பேற்றல், தங்க வைத்தல், அவர்களுக்கு பொறுப்பளித்தல் மற்றும் பாதுகாப்பளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்கென தொண்டர் அமைப்புகள் மூலமாக நடாத்தி செல்லப்படும் அனைத்து வகையிலான இல்லங்களையும் நிலையங்களையும் கருதப்படுகின்றது.

“தொண்டர் அமைப்புகள்” என 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, தொண்டர் அமைப்புகளை (பதிவு செய்தல் மற்றும் மீளாய்வு) சட்டம் மற்றும் அதற்கேற்ற 1998 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, தொண்டர் சமுக சேவை அமைப்புகளை (பதிவு செய்தல் மற்றும் மீளாய்வு) (திருத்தங்கள்) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொண்டர் அமைப்புகள் என்று கருதப்படும்.

“அனாதைகள்” என்று சட்டபூர்வமாக திருமணமான பெற்றோருக்கு பிறந்த பிள்ளையாயின், பெற்றோர்கள் உயிரிழந்த அல்லது சட்டப்பூர்வமாக திருமணமாகாத பிறந்த பிள்ளைகளாயின் தாய் உயிரிழந்த பிள்ளைகளை அனாதைகள் என கருதப்படும்.

“கைவிடப்பட்ட” என சட்டப்பூர்வமாக திருமணமான பெற்றோர்களுக்கு பிறந்த பிள்ளையை அவ்விருவரால் கைவிடப்பட்ட அல்லது சட்டப்பூர்வமாக திருமணமாகாத, பெற்றோர்களுக்கு பிறந்த பிள்ளையாயின் தாயினால் கைவிடப்பட்ட பிள்ளைகள், கைவிடப்பட்ட பிள்ளைகள் என கருதப்படுவர்.

“நிர்க்கதியற்ற” என்று தாய் அல்லது தந்தை உயிரிழந்த பெற்றோர்களில் ஒருவரால் கைவிடப்பட்ட அல்லது மற்றைய நபரால் பெற்றோராக அனுசரிக்க முடியாத, பொறுப்பும் பாதுகாப்பும் தேவையான அரச திணைக்களமொன்றினால் அல்லது திணைக்களத்தின் மூலமாக அல்லது மாகாண உள்ளூராட்சி நிறுவனமொன்றின் மூலமாக வழங்கப்படும் உதவிகளை பெற்றுக்கொள்ளும் பெற்றோர்களுடைய பெற்றோர்களின் ஒருவர் மருத்துவ சான்றிதழுக்கிணங்க வருமானத்தை பெற முடியாத நோயாளர்களுடைய, தாய் அல்லது தந்தைக்கு நிரந்தர வருமானமொன்றில்லாத, பெற்றோர்களில் ஒருவர் சிறைவாசம் உள்ளவர் மற்றும் வருமான இல்லாமை, பெற்றோர்களில் ஒருவர் மருத்துவ சான்றிதழ்களால் உள ரீதியிலான பாதிக்கப்பட்டவர் என உறுதிசெய்த போது மற்றவருக்கு (தாய்க்கு அல்லது தந்தைக்கு) நிரந்தர வருமானமொன்று இல்லையாயின், நீதிமன்றத்தின் கட்டளை மீது அல்லது வேறொரு வகையில் பிளவுபட்ட பெற்றோர்களை விட்டு விலகிய குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகளை பொறுப்பேற்றுள்ள தாய்க்கு அல்லது தந்தைக்கு நிரந்தர வருமானமொன்று இல்லாத, குடும்பத்தை சேர்ந்த பிள்ளைகளை இவ்வாறு கருதப்படும்.

“துஷ்பிரயோகம்” என்று -

(அ) தண்டனை சட்டகோவையில் 286 அ, 288அ, 288 ஆ, 308அ, 360, 360இ, 363, 364அ, 365 மற்றும் 365 ஆ, பிரிவுகளில் ஏதேனும் ஒரு ஏற்பாடு ;

(ஆ) இளம் பெண்களையும், பிள்ளைகளை சேவையில் (பணியில்) ஈடுபடுத்துவது பற்றிய கட்டளை சட்டத்தின் ஏதேனும் ஒரு ஏற்பாடு ;

(இ) பிள்ளைகள் மற்றும் இளைஞர்கள் பற்றிய கட்டளை சட்டத்தின் ஏதேனும் ஒரு ஏற்பாடு ;

(ஈ) கல்வி கட்டளை சட்டத்தின் கீழ் தயாரிக்கப்பட்ட கட்டாய கல்வித்துறைக்கு ஏற்ற கட்டளைகளில் ஏதேனும் ஒரு ஏற்பாடு.

“அபச்சாரம்” என (15 ஆவது அத்தியாயத்தின்) தண்டனைகள் சட்டகோவையின் குறிப்பிடப்படும்.

“ஸ்தாபித்தல்” சிறுவர் அபிவிருத்தி நிலையம் அல்லது பொறுப்பேற்றும் சிறுவர் அபிவிருத்தி மாகாண நிலையமொன்றில் தங்கியுள்ள பிள்ளையொன்றை பெற்றோர்களிடம் அல்லது பொறுப்பாளர்களிடம் அல்லது உறவினர்களிடம் அல்லது வேறொரு வகையில் பிள்ளையின் நலன்கருதி சமுகத்திற்கு விடுவித்தல் என கருதப்படுகிறது.

“ஸ்தாபித்தல் குழு” என சிறுவர்அபிவித்தி நிலையமொன்றாயின் அதன் முகாமையாளர், பிரதான நிர்வாகி, சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் பொறுப்பாளர்கள், நிலையம் பொறுப்பான நடன்னடத்தைகள் உத்தியோகத்தர், சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை மீளாய்வு செய்கின்ற உத்தியோகத்தர்கள் ஆணையாளர் அல்லது அவரால் அனுமதி வழங்கப்பட்ட அவருடைய அனுமதியை பெற்ற அவருடைய அலுவலக அலுவலர் குழுவைச் சேர்ந்த அலுவலருடன் நடாத்தப்படும் கூட்டமொன்று என கருதப்படுகின்றது. பொறுப்பேற்கும் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றாயின் மேற்றன், அச் சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ள நன்னடத்தைகள் அலுவலகத்தின் நிலைய பொறுப்பு நன்னடத்தை உத்தியோகத்தர், சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கென விடுவிக்கப்பட்டுள்ள நன்னடத்தைகள் அலுவலர்கள், பெற்றோர்கள், பொறுப்பாளர்கள், ஆணையாளரினால், அனுமதி வழங்கப்பட்ட அலுவலரினால், அனுமதி வழங்கப்பட்ட அலுவலரின் உள்ளிட்ட குழுவினால் நடாத்தப்படும் கூட்டத்தை இவ்வாறு கருதப்படும்.

“முகாமையாளர்” என எந்தவொரு அபிவிருத்தி நிலையத்தினதும் நிர்வாகக் கடமைகள் பொறுப்பாக செயற்படும் மற்றும் அவ் நிலையத்தின் உரிமையாளர் அல்லது நிர்வாகி அல்லது ஏனைய ஒருவர் என கருதப்படும்.

சிங்கள மொழிச் சொல் அமுலில் இருத்தல் வேண்டும் என்பது.

60. இந்நியதிச் சட்டத்தின் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளுக்கிடையில் ஒவ்வாமை ஏற்பட்டால் சிங்கள மொழிச் சொற்கள் அமுலில் இருக்கும்.

*முதலாவது உப அட்டவணை*

**சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

..................................................................... மாகாணத்தின் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்கள ஏற்பாடுகளின் கீழ் ................................................... மாவட்டத்தின் .................................................. எனும் இடத்தில் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை ஆரம்பிப்பதற்கு அனுமதிகோரல்.

(i) உத்தேச சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பெயர் :..........................................................................................

(ii) முகவரி மற்றும் தொலைபேசி :.......................................................................................................................

(iii) சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற தொண்டர் அமைப்பின் பெயர் :.........................................................................................................................................

(iv) அதனை சமுக சேவைகள் திணைக்களம் அல்லது வரையறுக்கப்பட்ட நிறுவனமொன்றின் பதிவு செய்தல் பற்றிய விபரம் (பதிவு சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கவும்).
.........................................................................................................................................

(v) தொண்டர் அமைப்பின் நோக்கம் :...................................................................................................
.........................................................................................................................................
(யாப்பின் பிரதியொன்றை இதனுடன் இணையுங்கள்).

(vi) இவ் அமைப்பின்-

**அலுவலர் குழு**

| | பெயர், முகவரி | தொ.பே. இலக்கம் |
|---|---|---|
| கௌரவ தலைவர் | ..................................................... | ........................................ |
| கௌரவ செயலாளர் | ..................................................... | ........................................ |
| கௌரவ பொருளாளர் | ..................................................... | ........................................ |
| போதகர் : | ..................................................... | ........................................ |

(vii) தொண்டர் அமைப்பின் சொத்துக்கள் :

| நிதியியல் வங்கி கிளைகள் | கணக்கு இலக்கம் | தற்பொழுது உள்ள சொத்து |
|---|---|---|
| 1. ................................................ | ......................................... | .................................................... |
| 2. ................................................ | ......................................... | .................................................... |
| 3. ................................................ | ......................................... | .................................................... |

ஏனைய சொத்துக்கள் :

(வாகனங்கள், காணிகள், கட்டிடங்கள் ..................................................................................என்பன பற்றிய விபரங்களை தருக) :.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

.........................................................................................................................................

(viii) தொண்டர் அமைப்புக்களுக்கு வெளிநாட்டு உதவிகளை வழங்குகின்ற நிறுவனங்களும் நன்கொடையின் அளவும்

| நிறுவனம் | வருடாந்தம் வழங்கப்படும் கொடையின் அளவு |
|---|---|
| ........................................................ | ........................................................................................................................ |
| ...................................................... | ............................................................................................................................. |
| ........................................................ | ........................................................................................................................ |
| ...................................................... | ............................................................................................................................. |

(ix) தொண்டர் அமைப்பின் கணக்கு பணிகளை எவரால் மேற்கொள்ளப்படுகின்றது?

2. (i) அனாதை இல்லங்களை நடாத்துவதற்கு கருதுகின்ற முகாமைத்துவ குழுவின் விபரம் :

| பெயர் மற்றும் நிலை | வயது | முகவரி | தொ. பே. இலக்கம் : |
|---|---|---|---|
| ..................................... | ................................. | ....................................................... | .............................................. |
| ..................................... | ................................. | ....................................................... | .............................................. |
| ..................................... | ................................. | ....................................................... | .............................................. |
| ..................................... | ................................. | ....................................................... | .............................................. |
| ..................................... | ................................. | ....................................................... | .............................................. |
| ..................................... | ................................. | ....................................................... | .............................................. |
| ..................................... | ................................. | ....................................................... | ............................................. |

(ii) இச் சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை நடாத்திச் செல்லும் போது ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கப்படும் முகாமையாளரின் தகுதி :-

(a) பெயர்:-....................................................................................................................... ............................................ ......
(b) பிறந்ததிகதி ..........................................................................................................................................................
(c) கல்வி மற்றும் தொழில் ரீதியிலான தகமைகள் : ....................................................................................... ................
(d) தொழில் அனுபவம் : ..............................................................................................................................................

(iii) உத்தேச சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் கணக்கு விவகாரங்களை எவரால் மேற்கொள்ளப்படுகின்றது ?

.................................................................................................................................................................

3. சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு பாதுகாப்பை பெற்றுக்கொடுப்பதற்கு என கருதுவது :

(a) ஆண் பிள்ளைகளா/பெண் பிள்ளைகளா/இரு பிள்ளைகளையுமா (கலவையா)............................................................
.....................................................................................................................................................
(b) பிள்ளைகளின் வயது எல்லை :..................................................... ........................................................ ...............
(c) எதிர்பார்க்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை : ................................................................................................ ..

(iiI) சிறுவர் அபிவிருத்தி நிலையமொன்றை நடாத்தி செல்வதற்கு ஈடுபடுத்தப்படும் ஊழியர்களின் எண்ணிக்கை :...............
(ஒவ்வொரு சேவைகளிலும் ஈடுபடுத்தல் பற்றிய விபரம்) :
.................................................................................................................................................................
.................................................................................................................................................................

| பெயர் | பதவி | வயது | கல்வி/தொழில் தகைமைகள் | அநுபவம் |
|---|---|---|---|---|
| ...................................... | ................................. | ................... | ................................................ | ..................................... |
| ...................................... | ................................. | ................... | ................................................ | ..................................... |
| ...................................... | ................................. | ................... | ................................................ | ..................................... |
| ...................................... | ................................. | ................... | ................................................ | ..................................... |
| ...................................... | ................................. | ................... | ................................................ | ..................................... |

4. உத்தேச சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கான கட்டிடங்களை நிர்மானிப்பதற்கு கருதப்படுகின்ற/நிர்மானிக்கப்பட்டுள்ள காணி அமைப்பிற்கு சொந்தமானதா? (அமைப்பிற்கு சொந்தமானதாயின் சம்பந்தப்பட்ட விவரங்களையும் காணி உறுதி பத்திரங்களின் பிரதிகளையும் இணைக்கவும்).

..................................................................................................................................................................................................
..................................................................................................................................................................................................
..................................................................................................................................................................................................

ii. உத்தேச சிறுவர் நிலையத்தின் இடவசதிகள் அறைகள் உட்பட அனைத்து மண்டபங்கள் தொடர்பான விவரங்கள் (கட்டிட தள அமைப்பை இணைத்தல் வேண்டும்.)

| | நீளம் | அகலம் |
|---|---|---|
| a . படுக்கை அறை | | |
| b . கல்வி கடமைகளில் ஈடுபடுவதற்கு பொருத்தமான மண்டபம் | | |
| c . இளைப்பாறுவதற்கு பொருத்தமான மண்டபம் | | |
| d . விருந்தினர்களை சந்திப்பதற்கான மண்டபம் | | |
| e. அலுவலகம் | | |
| f . நோயாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அறைகள் | | |
| g . சிகிச்சை ரீதியிலான பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள அறைகள் | | |
| h. சமயலறை | | |
| i . ஊழியர்கள் தங்கும் அறைகள் | | |
| j . களஞ்சியம் | | |
| k . குளியலறை | | |
| I. மலசலகூடங்கள் | | |
| m . பெறுவதற்கான இடவசதிகள் | | |
| n . திறந்த வெளியில் விளையாடுவதற்கான இடவசதிகள் (காணியின்) அளவு | | |
| o. சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கான தண்ணீர் வசதிகளை வழங்கும் முறை | | |
| p . பிரதான மின்சார வசதி பெறப்பட்டுள்ளதா? | | |

5. 1. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பிள்ளைகளுக்கு முறையான கல்வியை பெற்றுக்கொடுப்பற்கு கருதுகின்ற பாடசாலை தொடர்பான விபரங்கள் :

| பாடசாலையின் பெயர் | சிறுவர் இல்லத்திற்கு இருக்கும் தூரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

II. சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு பெற்று கொடுப்பதற்கு எதிர்பார்க்கின்ற கல்வி வசதிகள்

.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................

I. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தங்கியுள்ள பிள்ளைகளுக்கு தேவையான சுகாதார வசதிகளை எவ்வாறு பெற்றுக்கொள்வது?
அருகில் அமைந்துள்ள மருத்துவ மனைக்கான தூரத்தை குறிப்பிடுங்கள்.

.............................................................................................................................................
.............................................................................................................................................

II. சிறுவர் அபிவிருத்தி நிலையம் ஆரம்பிப்பதற்கு உத்தேச பிரதேச சூழலின் சுபாவம் மற்றும் சுற்றுபுறத்தில் வாழும் மக்களின் சுபாவம் நகர் புறமா/கிராமபுறமா

.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................

III. அருகில் அமைந்துள்ள சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு உள்ள தூரம்/அச்சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஆண்களின் சிறுவர் அபிவிருத்தி நிலையமா?/பெண்களின் சிறுவர் அபிவிருத்தி நிலையமா/கலவன் நிலையமா?

.............................................................................................................................................
.............................................................................................................................................

IV. மத வழிபாடுகளுக்கான வசதிகள்

.............................................................................................................................................
.............................................................................................................................................

6. சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு உள்வாங்கப்படும் மாணவர்களை மீண்டும் சமுகமயப்படுத்துவதற்கு/ புனர்வாழ்வழிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் அணுகு முறைகள் (சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு அனுப்பிய பின், நெடுங்காலமாக சிறுவர் அபிவிருத்தி நிலையத்தில் தடுத்து வைக்காததோடு, மிக விரைவில் புனர்வாழ்வளித்து பெற்றோர்களிம் பொறுப்பளிக்க வேண்டும்) இவ் அணுகு முறைகளை விரிவாக குறிப்பிடல் வேண்டும்.

.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................
.............................................................................................................................................

மேலும், 1980 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட இலங்கை ஸ்தாபிக்கப்பட்ட கட்டளை சட்ட கோவையில் XIV தொகுதியில் 369 ஆம் பந்தியின் மீது அனாதை இல்லங்களுக்கான கட்டளைச் சட்டத்தின் நியமங்களுக்கு இணங்க அனாதை இல்லங்கள் பதிவு செய்வதற்கான பதிவாளர் ........................................... மாகாணத்தின் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள /வெளியிடப்படும் ஆலோசனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கமையவும் கடமையாற்றுவதாக உறுதி செய்கின்றேன். அத்தோடு என்னை பொறுத்த மட்டில் இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் உண்மையானவையெனவும் சரியானவை எனவும் குறிப்பிடுகின்றேன்.

| | | |
|---|---|---|
| ............................................... | ............................................................... | ............................................ |
| கௌரவ தலைவர் | கௌரவ செயலாளர் | கௌரவ பொருளாளர் |
| திகதி | திகதி | திகதி |

*இரண்டாவது உப அட்டவணை*

**........................................................... நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் கீழ் தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை பதிவு செய்தல்**

1. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் பெயர் :----.
2. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முகவரி :----.
3. புதிய பதிவு இலக்கமும் திகதியும் :----.
4. அனுமதிக்கப்படும் பிள்ளைகளின் எண்ணிக்கை ஆண்/பெண் :----.
5. முன்னர் பதிவு செய்யப்பட்ட இலக்கமும் திகதியும் (இருப்பின்) :----.
6. சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை நடாத்தி செல்லப்படுகின்ற தொண்டர் அமைப்பின் பெயர் :-----.

............................................................................ தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையத்தை பதிவு செய்வதற்கான நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் ஆணையாளரினால் அவ்வப்போது வெளியிடப்படுகின்ற ஏனைய அனைத்து ஆலோசனைகளுக்கும் ஏற்பாடுகளுக்கும் இணங்க வெளியிடப்படும் என்பதையும், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பதிவிலக்கத்தையும், திகதியையும் இரத்துச் செய்து, மேற்குறிப்பிடப்படும் புதிய பதிவிலக்கம் மற்றும் திகதியுடைய சிறுவர் மேற்படி சிறுவர் அபிவிருத்தி நிலையம் ...................................................... மாகாண அதிகார பிரதேசத்தில் நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் ஆணையாளர் ஆகிய நான், .................................. என்னால் பதிவு செய்யப்பட்டதென்பதை உறுதி செய்கின்றேன்.

தொண்டர் சிறுவர் அபிருத்தி நிலையத்தின் பதிவாளர்,
நன்னடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் ஆணையாளர்,
ஊவா மாகாணம்.

திகதி :

*மூன்றாவது உப அட்டவணை*

தொண்டர் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் சேவை நிலைமையை மேம்படுத்துவதற்கான பொதுதரத்தை நியமித்தல்

1. கட்டிடங்கள் வசதிகள் மற்றும் சுற்றுப்புற சூழல் பற்றிய தரங்கள்.

1.1 ஒரு பிள்ளைக்காக ஏறத்தாள 36 சதுர அடியை கொண்டவாறு நித்திரை கொள்வதற்கான வசதிகளையும் ஒவ்வொரு பிள்ளைக்கென கட்டிலொன்றும், நுளம்பு வலையொன்றும் இருத்தல் வேண்டும். தேவைக்கு ஏற்ப கட்டில் மின் குமிலொன்றும் இருத்தல் வேண்டும்.

1.2 உணவு உட்கொள்வதற்கு, படிப்பதற்கு இளைப்பாறுவதற்கு, விருந்தினர்களை சந்திப்பதற்கு இடவசதி பிள்ளைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு நித்திரை கொள்வதற்கான இடவசதியை தவிர கட்டிடங்களில் இருத்தல் வேண்டும். கற்றலில் ஈடுபடும் போது பயன்படுத்த தேவையான மேசைகள், கதிரைகள் என்பன இருத்தல் வேண்டும். ஒவ்வொரு நொடியிலும் அதனை சுத்தப்படுத்தல் வேண்டும். தேவையாயின் சுத்தப்படுத்த தேவையான கிருமி நாசினிகளை பயன்படுத்தல்.

1.3 இல்லத்திற்கு தேவையான சூரிய ஒளி, காற்று கிடைக்ககூடிய வகையில் 1/7 சதுர அளவைக் கொண்ட யன்னல், கதவுகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

1.4 சேவையாளர்களுக்கு தேவையான இட வசதி வேறுபட்ட வகையில் இருத்தல் வேண்டும். அதை தவிர இரவு நேரங்களில் பிள்ளைகளுடைய தேவைகள் பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்கு இலகுவான வகையில் நிர்வாகி/தாய்/தந்தையின்/அறை சம்பந்தப்பட்ட பிள்ளையின் அறைக்கு அருகில் அமைந்திருத்தல் வேண்டும்..

1.5 கட்டிடங்களை தூய்மையாகவும் அழகாகவும் வைத்திருத்தல் வேண்டும். குழவுள்ள வீட்டுத் தோட்டத்தை சிறுவர் இல்லத்திற்கு பயன்தரக்கூடிய வகையிலும் நடாத்தி செல்லல் வேண்டும்.

1.6 இல்லத்தின் தேவைகளுக்கு ஏற்றவாறு நீர் வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும். பிள்ளைகளின் உயரத்தை கவனத்திற்கொண்டு முகம் கழுவுவதற்கான பேசன்கள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

1.7 கிணற்றிலிருந்து நிர் கிடைக்குமாயின், அதனை குழ மதில் அமைத்திருத்தல் அல்லது வலையொன்றினால் பாதுகாக்க வேண்டும்.

1.8 பிள்ளைகளும், ஊழியர்களும் நீராடுவதற்கான வசதிகளை பாதுகாப்பான வகையில் செய்திருத்தல் வேண்டும். அதை தவிர குளியலறைகளையும், மலசல கூடங்களையும் அமைத்திருத்தல் வேண்டும்.

1.9 தங்கியுள்ளவர்கள் 8 பேருக்கு ஒரு மலசலகூடம் இருக்க வேண்டியதோடு, அவற்றையும் கால்வாய்களையும் கிருமி நாசினிகளையிட்டு சுத்தம் செய்வதற்கு ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

1.10 இல்லத்தின் மொத்த தேவைக்கு ஏற்றவாறு இரவிற்கு தேவைப்படும் வெளிச்சத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும். மின்சாரம் துண்டிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் எரிபொருள் மூலமான குழிழ்களை பயன்படுத்த வேண்டியதோடு மண்ணெண்ணை அல்லது வேறு எரிபொருள்களை பயன்படுத்தப்படும் பாதுகாப்பான குமிழ்களை பயன்படுத்தல் வேண்டும்.

1.11 மின் வயர் மற்றும் கேபலகள் என்பவற்றை பாதுகாப்பான முறையில் பயன்படுத்தியிருத்தல் வேண்டும்.

1.12 தீபற்றக்கூடிய அனைத்து பொருட்களையும் பிள்ளைகளுக்கு தென்படாத வகையில் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும்.

**2. உணவு வகைகளின் தரங்கள் :**

2.1 தங்கியுள்ளவர்களுடைய வயதிற்கும் சுகாதார நிலைமைக்கும் தேவையான வகையில் போஷாக்குடனான உணவை வழங்குதல் வேண்டும்.

2.2 அந்தந்த வயதெல்லைக்கு ஏற்ப உணவு வகைகளை தயாரிக்க வேண்டும்.

2.3 அன்றாடம் வழங்கப்படுகின்ற உணவு வகைகளை அதன் அளவுகள் என்பவற்றை குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

2.4 ஏறத்தாள ஒரு வாரத்திற்கு தேவையான அரிசி, தேங்காய், சீனி, மா, பலசரக்கு போன்றவைகளை 3 பிரிவாக அதனுடன் மரக்கறிவகைளும் களஞ்சியப்படுத்தி வைக்க வேண்டும்.

2.5 பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு பாடசாலையிலிருந்து உட்கொள்வதற்காக மேலதிக உணவை பெற்றுக் கொடுத்தல் வேண்டும். அல்லது ஒவ்வொரு பிள்ளைக்கும் தேவையான மேலதிக உணவை பெற்றுக்கொள்வதற்கு தேவையான பணத்தை அவர்களிடம் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

**3. பிள்ளைகளின் உடைகள் பற்றிய தரங்கள் :**

3.1 ஒவ்வொரு பிள்ளைக்கும் கட்டில் விரிப்புகள், போர்வைகள், துடைப்புகள், பல்துலக்கிகள், பற்பசைகள் என்பவற்றை தேவையான வகையில் பெற்று கொடுத்திருத்தல் வேண்டும். அதே போன்று ஒவ்வொரு பெண் பிள்ளைக்கும் தேவையான வகையில்.

3.2 ஒவ்வொரு பிள்ளைகளுக்கு குறைந்த பட்சம் இல்லத்திலிருந்து அணிவதற்கு தேவையான இரண்டு ஆடைகள் பாடசாலைச் சீருடைய 3 ஆம், வைபங்களின் போது அணிவதற்கு பொருத்தமான உடையொன்றும் இருத்தல் வேண்டும்.

3.3 ஒவ்வொரு ஆண் மற்றும் பெண் பிள்ளைகளுக்காகவும் குறைந்த பட்சம் மூன்று உள்ளாடைகளாவது பெற்று கொடுத்தல் வேண்டும்.

3.4 பிள்ளைகளுக்கு வழங்கப்படுகின்ற கட்டில் விரிப்புகள், துடைப்புகள், போர்வைகள், சிறுவர்களின் ஆடைகள் என்பவற்றை டெலோ போன்ற கிருமி நாசினிகளை பயன்படுத்தி சுத்தப்படுத்த வேண்டியதோடு பெண்களுக்கு வழங்கப்படும் சொகுசுக்கான மெத்தை போன்ற பொருட்களை (Pad) அப்புறப்படுத்துவதற்கு பொருத்தமான முறையொன்றிருக்க வேண்டும்.

**4. உபகரணங்கள் பற்றிய தரங்கள் :**

**(அ) வீட்டுத் தளபாடங்கள் :**

4.1 6 வயதிற்கு குறைந்த ஒவ்வொரு பிள்ளையினதும் ஆடைகள், நூல்கள் போன்ற சொந்த உபகரணங்களையும், சொந்த பொருட்களையும் வைப்பதற்காக ஒரு அலுமாரி வீதம் இருக்க வேண்டும்.

4.2 6க்கு குறைந்த பிள்ளைகளுடைய ஆடைகளையும் ஏனைய உபகரணங்களையும் வைத்துக்கொள்வதற்கு பொதுவான அலுமாரியொன்றிருத்தல் வேண்டும்.

4.3 தங்கியுள்ள பிள்ளைகள் உணவு உண்பதற்கு வாசித்தல் போன்ற பணிகளுக்காகவும் பாவிப்பதற்கு தேவையான மேசைகள் கதிரைகள் என்பன போதியளவிற்கு இருத்தல் வேண்டும். உணவு உண்பதற்கான 8 பிள்ளைகளுக்கு ஒரு மேசையும், அமருவதற்கான சிறந்த கதிரைகள் என்பன இருத்தல் வேண்டும்.

4.4 ஒவ்வொரு பிள்ளைகளுக்காகவும் கோப்பைகள், பீங்கான்கள் உணவு பரிமாறுவதற்கான கரண்டிகள் என்பன இருத்தல் வேண்டும்.

4.5 இலகுவாக நுழைய கூடிய வகையில் பீங்கான கோப்பைகளை கழுவுவதற்கான வசதிகளை செய்யப்படல் வேண்டும்.

4.6 தேவைக்கு ஏற்றவாறு குழந்தைகளுக்கு தேவையான பால் போத்தல்கள் என்பன வெவ்வேறாக இருத்தல் வேண்டும்.

**(ஆ) சமயலறை :**

4.7 தங்கியுள்ள பிள்ளைகள் அனைவருக்காகவும் உத்தியோகத்தர்களுக்கும் பொருத்தமான பொதுவான பொருட்களும் சமயலறைக்கு தேவையான உபகரணங்கள் இருத்தல் வேண்டும்.

4.8 விறகு, எரிவாயு என்பவற்றை சமயலறை கடமைகளுக்கென பயன்படுத்த வேண்டியதோடு அவற்றை பயன்படுத்தும் விதத்திற்கேற்ப அவற்றை பயன்படுத்தப்படும் முறைக்கு ஏற்ப வெவ்வேறு இடங்களை தயாரித்து கொள்ளல் வேண்டும்.

**(இ) கல்வி உபகரணங்கள் :**

4.9 பிள்ளைகள் கல்வி கற்கின்ற பாடசாலைகளால் விதிக்கப்படுகின்ற நூல்கள் மற்றும் உபகரணங்களை பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும்.

4.10 பிள்ளைகள் ஓய்வுநேரத்தில் வாசிப்பதற்கு தேவையான நூலக வசதிகள் என்பன இருத்தல் வேண்டும்.

4.11 நாளாந்தம் வெளியாகும் செய்தி தாள்களையும்/செய்தி தாள்கள் மற்றும் நாளாந்தம் வெளிவருகின்ற சிறுவர் பத்திரிகைகளை பெற்றுகொள்வதற்கு ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

4.12 பிள்ளைகளுக்கு வினோதகரமான விடயங்களுக்கு தேவையான உபகரணங்கள் இருத்தல் வேண்டும்.

**(ஈ) பிள்ளைகளுடைய சுய திறமைகளுக்கு ஏற்றவாறும் ஓய்வு நேரத்தை பிரயோசனமான வகையில் கழிப்பதற்கு தேவையான உபகரணங்கள் :**

4.13 கீழ் குறிப்பிடப்படும் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கீழ் குறிப்பிடப்படும் உபகரணங்களை பெற்று கொடுத்திருத்தல் வேண்டும்.

(i) வானொலி பெட்டியொன்று ;
(ii) தொலைக்காட்சி, பெட்டியொன்று (24 அங்குல வர்ண தொலைக்காட்சி பெட்டி) ;
(iii) இசை கருவிகள் ;
(iv) ஐந்து வயதிற்கு குறைந்த பிள்ளைகளுக்காக நிர்மாணத்துறை விளையாட்டு உபகரணங்கள் ;
(v) பிள்ளைகளுடைய தேவைக்கு ஏற்ப ஓய்வு நேரத்தை கழிப்பதற்கு தேவையான செஸ் விளையாட்டு உபகரணங்கள், தாயக்கட்டை, கரம் விளையாட்டு, இறப்பர் பந்துக்கள் போன்ற விளையாட்டு உபகரணங்கள்.

**(உ) விளையாட்டு வசதிகள் :**

4.14 ஒவ்வொரு இல்லத்திலும் தங்கியுள்ள பிள்ளைகளுக்கு ஏற்றவாறு வெளிக்கள விளையாட்டுகளில் ஈடுபட தேவையான மைதானமொன்று இருத்தல் வேண்டும்.

4.15 இல்லத்திற்கென விளையாட்டு மைதானமொன்று இல்லையாயின், வெளியில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானமொன்றை பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகளை செய்திருத்தல் வேண்டும்.

4.16 இல்லத்திற்கு தேவையான வகையில் விளையாட்டு உபகரணங்களை பெற்றுகொள்ளல் வேண்டும்.

4.17 இல்லத்திற்கு தேவையான வகையில் உள்ளக விளையாட்டு உபகரணங்களை பெற்றுக்கொள்ளல்.

4.18 பிள்ளைகளுக்கு விளையாட்டு, நடனம், இசை போன்ற துறைகளை கற்று கொள்வதற்கு போன்று விளையாட்டு கழகங்களிலும் சமய ரீதியிலான நடவடிக்கைகள் தொடர்பிலும் கடமையாற்றுவதற்கு தேவையான வசதிகளை வழங்கியிருத்தல் வேண்டும்.

5. சிறுவர் இல்லங்களின் முகாமைத்துவம் பற்றிய தரங்கள்.

(அ) சிறுவர் இல்லங்களின் முகாமைத்துவ குழு.

5.1 முகாமைத்துவ கூட்டங்களின் தேவைக்கு ஏற்ப இல்லத்தின் தாய்/தந்தை/நிர்வாகிகள் கட்டாயமாக அழைக்கப்பட வேண்டும்.

5.2 முகாமைத்துவ குழுவை தெரிவு செய்ததன் பின்பு அந்நியமனம் பற்றிய அறிக்கையொன்றை நன்னடத்தைகள் அலுவலகத்திற்கான பிரதியொன்றுடன் மாகாண ஆணையாளரிடம் அறிவித்தல் வேண்டும்.

5.3 முகாமைத்துவ குழுவினால் பிள்ளைகளுடைய வாழ்கையை பாதிக்க கூடிய வகையிலான தீர்மானங்களை மேற்கொள்ள முன்பு அது விடயம் குறித்த தாபன குழு/இல்லத்திற்கு பொறுப்பான நன்னடத்தைகள் உத்தியோகத்தர்கள்/சிறுவர் உரிமைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர்களுடன் கலந்துரையாடல் வேண்டும்.

5.4 குறைந்தபட்சம் மாதம் ஒருமுறையாவது முகாமைத்துவ குழு கூட வேண்டியதோடு குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது சிறுவர் இல்ல சூழலில் கூடல் வேண்டும்.

5.5 பாடசாலை விடுமுறைக் காலத்தில் அல்லது பிள்ளையினுடைய குடும்பத்தில் நடைபெறும் விசேட வைபவங்களின் போது, பிள்ளையை அக்குடும்ப வைபவத்தோடு கலந்து கொள்வதற்கான வாய்ப்பை அல்லது அதற்கான வசதிகளை செய்து கொடுத்தல் வேண்டும்.

5.6 சிறுவர் ஒருவரை சிறுவர் இல்லத்தில் சேர்ந்த நாள் முதல் அப்பிள்ளையின் குடும்பத்துடன் நெருங்கிய உறவுகளை வளர்ப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5.7 சிறுவர் இல்லத்தை சேர்ந்த மாணவர்களுக்கு வழங்கப்படும் சேவையை அதிகரிக்க செய்வதற்கான சிறுவர் இல்லத்தைச் சேர்ந்த பிள்ளைகளுடைய உடல் மற்றும் உள ரீதியிலான தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் தேவையான வகையில் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

5.8 வயதைத் தாண்டி பிள்ளைகளை மீண்டும் சமூகமயபடுத்த தேவையான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும்.

5.9 சிறுவர் இல்லம் மற்றும் அங்கு தங்கியுள்ள பிள்ளைகள் தொடர்பில் நிலவுகின்ற விதிமுறைகளின் செயற்பாடுகள் தொடர்பில் அலுவலர் குழுவை அறிவுறுத்தல் வேண்டும்.

5.10 சம்பள நிர்வாகக் குழுவின் சிபாரிசுகளை பின்பற்றி இல்லத்து நிர்வாக தாய்/தந்தை (நிர்வாகிகள்) உட்பட அலுவலர் குழுவிற்கு வேதனம் அல்லது கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5.11 சிறுவர் இல்லத்தில் தங்கியுள்ள பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் நலன் கருதி கீழ் குறிப்பிடப்படும் சேவைகளை வழங்குதல் வேண்டும் :-

(i) சிறுவர் இல்லத்தில் இருக்கும் பிள்ளைகளின் உணவுகள் மற்றும் ஏனைய தேவைகளை பற்றி ஆராய்தல் ;

(ii) சிறுவர் இல்லத்தின் நடைமுறைக்கு தேவையான நிதியை பெற்றுக்கொள்ளல் நிர்வாகம் மற்றும் பிள்ளைகளை நிலை நிறுத்துவது பற்றிய நடவடிக்கைகள் போன்றவை முறையான அமைப்பு திட்டமிட்டு வைத்திருத்தல்.

(iii) திணைக்கள நியமங்கள் மற்றும் ஆலோசனைகளுக்கிணங்க இல்லத்தை நடாத்திச் செல்லல் திணைக்களத்திற்கு வழங்க வேண்டிய அறிக்கைகளை தவறாது பெற்றுக்கொடுத்தல், சிறுவர் இல்லங்கள் பற்றி அவ்வப்போது ஏற்படுகின்ற சட்ட த்திருத்தங்கள், மற்றும் வெளியிடப்படும் சுற்று நிருபங்களுங்கிணங்க திணைக்கத்தின் மூலமாக வழங்கப்படும் ஆலோசனைகளை பின்பற்றல் ;

(iv) திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கொடை உதவிகள் மற்றும் நடாத்தல் உதவி பணத்தை உரிய வகையில் செலவிடுதல், அவ் உதவிகளை பெற்றுக்கொள்வதற்கு முன்பு வரையறுக்கப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் உறுதி செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகளை திணைக்களத்திடம் சமர்ப்பித்தல்.

5.12 கீழ் குறிப்பிடப்படும் பட்டியல்களை இல்லத்தில் நடாத்தி செல்லல் வேண்டும் :-

(i) உட்படுத்துவதற்கான அட்டவணை
(ii) நாளாந்த வரவு அட்டவணை
(iii) கணக்கு நூல்கள்
(iv) பேரேட்டு அட்டவணை (திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக)
(v) விருந்தினர்களின் குறிப்பீடு
(vi) பொருட் பட்டியல் புத்தகம்
(vii) உணவு குறிப்பு புத்தகம்
(viii) தங்கியுள்ள ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் ஒவ்வொரு கடிதக்கோவை
(ix) பிள்ளைகளின் மருத்துவ வசதிகள் பற்றிய பொதுக் கோவை
(x) உள்நாட்டு ரீதியிலான கிடைக்கின்ற கொடைகள் பற்றிய அட்டவணை
(xi) வெளிநாட்டு ரீதியிலாக கிடைக்கின்ற கொடைகள் பற்றிய அட்டவணை
(xii) தொகை நூல்.

5.13 திணைக்களத்தினால் வேறு ஒவ்வொரு வகையிலும் பெறப்பட்ட பொருட்கள், உபரகணங்கள் பற்றிய விவரங்களை நூலுக்கு உட்படுத்த வேண்டியதோடு, அவற்றை வருடாந்த மீளாய்விற்கு உட்படுத்த வேண்டும்.

(ஆ) அலுவலர் குழு தொடர்பான தரங்கள்.
அனைத்து சிறுவர் இல்லத்திலும் வாழும் பிள்ளைகள் சம்பந்தமாக முறையாக பயிற்றுவிக்கப்பட்ட பொறுப்பு கூறும் தாய்/ தந்தை பிரதான நிர்வாகிகள் இருத்தல் வேண்டும்.

அவர்/அவள் கீழ் குறிப்பிடப்படும் தகமைகளை பூர்த்தி செய்தவராக இருத்தல் வேண்டும்.

(i) குறைந்த பட்சம் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றுவித்த ஒருவர் (தற்பொழுது கடமையில் உள்ளவர்களுக்கு தொடர்பு இல்லை)

(ii) 30 வயதிற்கு குறையாத 60 வயதை தாண்டாத ஒருவர் ;

(iii) சிறந்த நடத்தை உடையவராகவும் நல்ல ஒழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(iv) உடல் ரீதியிலாகவும் உள ரீதியிலாகவும் நலமானவா நற்குணமுடையவராதல் ;

(v) சிறுவர்களை பராமரிப்பதற்கான மனப்பான்மையும் பண்பும் உள்ளவராதல் ;

(vi) சிறுவர் அபசாரங்கள் காரணமாக குற்றம் சாட்டப்படாத ஒருவர்.

5.14 அலுவலர் குழுவிற்கென சேர்த்து கொள்ளப்பட்ட உதவி நடத்துநர்கள் குறைந்த பட்சம் க. பொ. த. சாதாரண தரத்தில் 5 பாடங்களை சித்திபெற்றிருத்தல். அதை தவிர மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரதான நிர்வாகியின் (நடாத்துனரின்) தகைமைகள் பட்டியலில் (ii) முதல் (vi) வரை குறிப்பிடப்படும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

5.15 பிரதான பொறுப்பாளராக கடமையாற்றும் தாய்/ தந்தை (நடத்துநர்) அல்லது ஏனைய உதவியாளர்கள் அவ்வப்போது திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பயிற்சிகளில் பங்குபற்றல் வேண்டும்.

5.16 பிரதான பொறுப்பாளராக கடமையாற்றும் வளர்ப்பு தாய்/தந்தை (நடத்துநர்கள்) இல்லத்திலேயே வசிக்க வேண்டும்.

5.17 பிரதான வளர்ப்பு தாய்/தந்தை (நடாத்துநர்கள்) மாத்திரமின்றி உதவி நடாத்துநர்கள் ஏதேனும் பயிற்சிகளை பெறாதவர்களாயின் திணைக்களத்தின் மூலமாக அவ்வப்போது நடாத்தப்படுகின்ற பயிற்சி பாடநெறிகளில் கலந்து கொண்டு பயிற்சிகளை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

(இ) சுகாதார சேவைகள் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தரங்கள்.

5.18 சிறுவர்களுடைய மருத்துவ தேவைகள் தொடர்பில் சிறுவர் இல்லத்திற்கு வருகை தந்து விசாரிப்பதற்கும், அம் மருத்துவ நிலையங்களுக்கு பிள்ளைகளை அழைத்து சென்று சிகிச்சைகளை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சுகாதார திணைக்களத்தின் அல்லது தனியார் மருத்துவர் ஒருவரை சந்தித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

5.19 பிள்ளைகளுக்கு தேவையான தடுப்பூசிகளை பெற்றுகொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும்.

5.20 சிறுவர் இல்லமொன்றுக்கு உட்படுத்தும்போது ஒவ்வொரு பிள்ளை சார்பாகவும் மருத்துவ அறிக்கையொன்றை பெற்றுகொள்ள வேண்டியதோடு, ஒவ்வொரு பிள்ளையையும் வருடாந்த மருத்துவ விசாரணைக்கு உட்படுத்தி, அது விடயம் குறித்து பிள்ளையின் சுயவிபரக் கோவையின் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். பிள்ளையின் உயரம், நிறைபோன்றவையும் அடையாளங்கள் பற்றியும் அதில் குறிப்பிடுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5.21 மருத்துவ அறிக்கைக்கிணங்க போஷாக்கின்மையால் பாதிக்கப்படுகின்ற பிள்ளைகளை போஷாக்கு நிலையங்களுக்கு அனுப்புவதற்காக, பிரதேசத்தின் மாகாண ஆணையாளரின் ஆலோசனைகளை பெற்றுக்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருத்தல் வேண்டு.

5.22 பிறப்புச் சான்றிதழ்கள் இல்லாத பிள்ளைகளுக்கு கணிக்கப்படும் ஓராண்டில் இருந்து வயது சான்றிதழலொன்றை பெற்று கொடுப்பதற்காக தேவையான மருத்துவ சான்றிதழ்களை பெறுவற்கு சம்பந்தப்பட்ட பிள்ளையை மருத்துவரிடம் காட்டிய பின்பு பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5.23 ஒவ்வொரு பிள்ளையினதும் தலை, தலை முடி, பேன்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும்.

5.24 தலைமுடியை வெட்டி சுத்தப்படுத்த வேண்டுமென்றால் பிள்ளைகளின் தலை முடியை சிறந்த முறையில் வெட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

5.25 ஒவ்வொரு இல்லத்திலும் குறைந்த பட்சம் முதலுதவி பெட்டியொன்று இருத்தல் வேண்டியதோடு மருத்துவர் ஒருவரால் சிபாரிசு செய்யப்பட்ட மருந்து பொருட்களை அங்கு வைத்திருத்தல் வேண்டும். அலுவலர் குழுவில் எவரேனும் ஒருவர் அவ்விடத்திற்கு இலகுவாக செல்லக்கூடிய இடத்தில் முதலுதவி பெட்டியை வைத்திருத்தல் வேண்டும்.

5.26 தங்கியுள்ள ஒரு பிள்ளைக்கு அல்லது பிள்ளைகளுக்கு தொற்று நோய்கள் அல்லது வேறொரு நோய் ஏற்பட்டபோது, அப்பிள்ளையை ஏனைய பிள்ளைகளிடமிருந்து வேறுபடுத்தி வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதோடு, அத்தகைய மாணவர்களுக்கென அறையொன்று வேறுபடுத்தி வைக்க வேண்டும்.

5.27 ஒரு பிள்ளைக்கு தொற்று நோய்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் அந்நோய் ஏனைய பிள்ளைகளுக்கு ஏற்படுவதை தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு அதிலிருந்து பிள்ளைகளை பாதுகாக்க வேண்டும்.

(ஈ) கல்வி சேவையின் தரங்கள் .

5.28 6 வயதிற்கு அதிகரித்த ஒவ்வொரு பிள்ளையையும் வரையறுக்கப்பட்ட பாடசாலையொன்றுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு பாடசாலைக்கு அனுப்ப முடியாத பிள்ளைகள் இருப்பார்களாயின் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மூலமாக நிறுவனத்திற்குள்ளிருந்தே கல்வி கற்பதற்கு வாய்ப்பளித்தல் வேண்டும்.

5.29 நிறுவனப் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளோடு பிள்ளைகளின் கல்வித் துறையின் முன்னேற்றம் பற்றி கலந்துரையாட வேண்டும்.

6 வயதிற்கு குறைந்த மற்றும் 3 வயதை தாண்டிய அனைத்து மாணவர்களையும் அருகில் உள்ள ஆரம்பப் பிள்ளை பருவ நிலையத்திற்கு அனுப்புவதற்கு அல்லது அவ்வாறான பிள்ளைகள் சார்பாக ஆரம்பப் பாடசாலை வகுப்புகளை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5.30 சிறுவர் இல்லத்து நேர அட்டவணையில் நாளாந்தம் படிப்பதற்கும் விளையாடுவதற்கும் நேரத்தை ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

5.31 பிள்ளைகளுக்கு ஏதேனும் தொழிற் பயிற்சியொன்றை பெற்றுகொடுப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

5.32 விசேடமாக 14 வயதை மீறிய ஆனால் கல்வியின் பெறுபேறுகளை சிறந்த முறையில் பெற்றுகெள்வதற்கு வாய்ப்பு கிடைக்காத அல்லது விசேட தொழிற் பயிற்சியை பெற்றுகொள்ளகூடிய அல்லது திறமையான பிள்ளைகளுக்காக தொழிற் பயிற்சிகளை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத் திட்டமொன்றை தயாரித்திருத்தல் வேண்டும்.

திணைக்களத்தின் உதவியோடு ஆரம்பிக்கப்பட்டுள்ள விசேட தொழில் அப்பியாச (பயிற்சி நிலையங்கள்) உள்ள சிறுவர் இல்லங்களுக்கு பொருத்தமான பிள்ளைகளை அனுப்பி வைப்பதற்காக மாகாண ஆணையாளருடைய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அவ்வாறில்லாத சந்தர்ப்பங்களில் அரசினால்நடாத்தப்படுகின்ற தொழில் பயிற்சி பாடநெறிகளை கற்பதற்கான சந்தர்ப்பத்தை பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டும்.

(உ) பிள்ளைகளின் வளர்ச்சிக்கேற்ற விசேட சேவைகள்.

5.33 ஒவ்வொரு பிள்ளை சார்பாகவும் நடாத்தி செல்லப்படுகிள்ற கோவைகளில் பிள்ளைகளை பற்றிய மாதம் ஒரு முறை குறிப்பிடுதல் வேண்டும்.

5.34 ஒவ்வொரு பிள்ளைகளினதும் கோவைகளில் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணைகளுடன் குறிப்புகளும் வைத்திருத்தல் வேண்டும்.

(i) பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ், அல்லது கணிக்கப்பட்ட ஆண்டிற்கான வயது சான்றிதழ் ;

(ii) மருத்துவ அறிக்கைகள்/தடுப்பூசி ஏற்றவேண்டிய தினங்கள்/ விசேட சிகிச்சையளித்தல் ;

(iii) பிள்ளையின் பாடநெறி சான்றிதல்கள் ;

(iv) சமுர்த்தி கொடுப்பனவை பெற்றுக்கொள்வது தொடர்பான குறிப்புகள் ;

(v) பிள்ளையின் உயரம், நிறை மற்றும் வளர்ச்சி பற்றிய குறிப்புகள் ;

(vi) பிள்ளையின் உடல்/ உள ஆரோக்கிய மற்றும் ஆண்மிக நடைமுறைகளின் வளர்ச்சி பற்றிய குறிப்புகள் ;

(vii) பெற்றோர்களை மற்றும் பாதுகாவலர்களை சந்தித்தல் தொடர்பான குறிப்புகள்.

(viii) நடைமுறைகள் தொடர்பில் நன்னடத்தை உத்தியோகத்தர்களோடு கலந்துரையாடி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான குறிப்புகள்.

(ix) நிலைநிறுத்தல் குழுவின் விசேட தீர்மானங்கள் பற்றிய குறிப்புகள்.

நிலை நிறுத்தல் :

6.1 பிள்ளைகளை நிலை நிறுத்தல் தொடர்பில் கீழ் குறிப்பிடப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(i) பெற்றோர்கள், பாதுகாவலர் இருக்கின்ற மற்றும் பெற்றோர்களையும் பாதுகாவலர்களையும் தேடிப்பிடிக்க கூடிய ஒவ்வொரு பிள்ளைகளையும் அவர்களிடம் பொறுப்பளித்தல் ;

(ii) பொறுப்பாளர்கள், பாதுகாவலர்கள் இருப்பினும் அவர்களுக்கு பிள்ளைகளை பற்றி கடமையாற்ற முடியாத சந்தர்ப்பங்களின் போது அதற்கென வேறு பொருத்தமானவர்களின் கீழ் பிள்ளைகளை தடுத்து வைத்தல் ;

(iii) அனாதைகள், கைவிடப்பட்ட பிள்ளைகள் மற்றும் வளர்ப்பதற்கான பெற்றோர்களினதும் பொறுப்பாளர்களினதும் உரிய விருப்பம் கிடைத்துள்ள பிள்ளைகளை சட்ட பூர்வமாக வளர்த்தெடுப்பதற்காக கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தல் ;

(iv) குறுகிய காலமாக அல்லது நீண்ட காலமாக பிள்ளைகளுக்கு நன்மை கிடைக்ககூடிய வகையில் வளர்ப்பு பெற்றோர்களிடம் பொறுப்பளிக்க ஏற்பாடு செய்தல், அல்லது இல்லத்திற்கு வருகின்ற வளர்ப்பு பெற்றோர்களால் பார்க்கக்கூடிய வகையில் அவர்களை இணங்கண்டு அதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளல் ;

(v) பிள்ளைக்கு நன்மைகிடைக்க கூடிய வகையில் பிள்ளைக்கு உதவி வழங்குவதற்கு முன்வரும் பெற்றோர்களை தேர்ந்தெடுத்து அறிமுகப்படுத்தல் ;

(vi) தொழில் வாய்ப்புகளை தேடி கொடுத்தல் அல்லது தொழிலை தேடி கொள்வதற்கு தேவையான வசகதிகளை செய்து கொடுத்தல் ;

(vii) தொழில் புரிய கூடிய வகையிலான தொழில் பயிற்சிகளை பெற்றுக்கொடுத்தல் ;

(viii) சுயதொழில் வாய்ப்புகளில் ஈடுபடுத்துவதற்கு விரும்புகின்ற பிள்ளைகளுக்கு தேவையான வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் மற்றும் பொருளாதார உதவிகளை பெற்றுக்கொடுத்தல் ;

(ix) பொருத்தமான வகையில் திருமணம் செய்து கொடுத்தல் ;

(x) வேறு சிறந்த மாற்று செயல்முறைகளை மேற்கொள்ளல் ;

6.2 நிலைநிறுத்தல் குழு :

திணைக்கள அனுமதியுடன் அல்லது அனுமதியின்றி இல்லத்தில் இருக்கின்ற பிள்ளைகளை வேறொரு இல்லத்திற்கு இடம் மாற்றுவதற்கு அல்லது இலத்தை விட்டு அப்புறபடுத்துவதற்கு அல்லது தங்கியுள்ள காலத்தை நீடிப்பதற்கு முன் சம்பந்தப்பட்ட நன்னடத்தைகள் உத்தியோகத்தர்களுடைய ஆலோசணையின் பிரகாரம் மாகாண ஆணையாளரின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்படுகின்றவர்களை கொண்டு நிலை நிறுத்தல் குழு கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளல் வேண்டும்.

(i) மாகாண ஆணையாளர்/இல்லத்திற்கு பொறுப்பான நன்னடத்தைகள் உத்தியோகத்தர் ;

(ii) தொண்டர் அமைப்பின் ஒரு அங்கத்தவர் ;

(iii) இல்லத்திற்கு பொறுப்பான தாய்/தந்தை ;

(iv) முகாமைத்துவ குழுவின் பிரதிநிதியொருவர் ;

(v) பொறுப்பான பெற்றோர்கள்/பிரதிநிதியொருவர்.

6.3 நிலைநிறுத்தல் குழுவிற்கு வெளி நபர் ஒருவரை பங்குபற்ற வைத்தல் தகாது.

6.4 இல்லத்தில் இருக்கின்ற ஒரு பிள்ளையை அவ்வில்லத்திலிருந்து அப்புறப்படுத்துவற்கு வேறொரு இல்லத்திற்கு மாற்றுவது பெற்றோர்களிடம் பொறுப்பளிப்பது அல்லது தங்கியுள்ள காலத்தை நீடிப்பது போன்ற விடயங்களை 3 மாதங்களுக்கு முன்னர் நிலை நிறுத்தல் குழு தீர்மானித்திருத்தல் வேண்டும்.

6.5 மேல் குறிப்பிடப்படும் நிலை நிறுத்தல் குழு குறைந்த பட்சம் 3 மாதத்திற்கு ஒரு முறையாவது கூட வேண்டும்.

7. பொது விவகாரங்கள் :

7.1 ஒவ்வொரு சிறுவர் இல்லத்திலும் அந்தந்த பிள்ளைகளுடைய மத வழிபாடுகளில் ஈடுபடக்கூடிய சூழல் இருத்தல் வேண்டியதோடு அதற்கான வேலைத்திட்டமொன்று தயாரித்திருத்தல் வேண்டும்.

7.2 நிர்வாகிகள் தாய்/தந்தை அல்லது முகாமையாளருடன் பிள்ளைகளுடைய மத வழிபாடுகளுக்கு எதிராக கடமையாற்றல் தகாது.

7.3 இல்லங்களின் மீளாய்வு பணிகளுக்கு பொறுப்பான நன்னடத்தைகள் உத்தியோகத்தர்களோடு கலந்துரையாடி ஒவ்வொரு பாடசாலை விடுமுறை காலத்திலும் விசேடமாக கவனத்திற்கு கொள்ளவேண்டிய அளவிற்கு தடைகள் இல்லையாயின் தனது இல்லத்திற்கு அல்லது உறவினரின் இல்லமொன்றுக்கு செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அத்தகைய சந்தர்ப்பம் இருக்கும் எந்த ஒரு பிள்ளையையும் பாடசாலை விடுமுறை காலத்தில் இல்லத்தில் தடுத்து வைக்க கூடாது.

7.4 தங்கியுள்ள மாணவர்கள் விருப்பம் தெரிவிப்பார்களாயின் சாரணர் குழுக்களுக்கும் விளையாட்டு குழுக்களுக்கும் உட்படுத்த ஏற்பாடு செய்தல் வேண்டும்.

7.5 சில மாதங்களுக்கு ஒருமுறை தங்கியுள்ள அனைத்து பிள்ளைகளையும் கல்வி சார்ந்த/ வினோத வணக்கஸ் தளங்களுக்கான சுற்றுலா ஒன்றிற்கு அழைத்து செல்வதற்கு ஏற்பாடு செய்தல்.

7.6 பிள்ளைகளின் பெற்றோர்கள் மற்றும் பொறுப்பாளர்களுடனான தொடர்பை வளர்க்கக்கூடிய வகையிலான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

7.7 பிள்ளைகளினால் எழுதப்படுகின்ற கடிதங்கள், அவர்களின் பெயருக்கு கிடைக்கின்ற கடிதங்கள், பெறப்படும் தொலைபேசி அழைப்புகள் அவர்களால் நடாத்திச் செல்லப்படும் நாளோடுகள் என்பவற்றை அலுவலர் குழுவினால் அல்லது வேறொருவரால் விசேட காரணமின்றி ஆராய்தல் கூடாது. ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் அவ்வாறு ஆராய்ந்தால் அது பற்றிய குறிப்பு ஒன்றை விடயகோவைக்கு உட்படுத்தி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு உகந்தது என்பதற்காக குறைந்தபட்சம் இரண்டு அலுவலர்களுடைய அனுமதியையாவது பெற்றுகொண்டதாக சம்பந்தப்பட்ட கோவையில் குறிப்பிடுதல் வேண்டும்.

7.8 அவ்வப்போது, சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் தெரிவு செய்யப்படுகின்ற ஆலோசனைக்குழு அங்கத்தவர்களுக்குத் தேவையான சந்தர்ப்பங்களில் இல்லத்தின் கடமைகளை பற்றி ஆராய்வதற்கு இடமளித்தல் வேண்டும்.

7.9 சிறுவர் இல்லத்திற்கு உள்நாடு அல்லது வெளிநாடு ரீதியிலாக கிடைக்கின்ற நிதி மற்றும் பொருட்கள் பற்றி கணக்கு நூல்களிலும், தொகை (மொத்த) நூல்களிலும் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்.

7.10 சிறுவர் இல்லம் வெளிநாட்டு நிறுவனங்களோடு செய்வதற்கு எதிர்பார்க்கின்ற சகல விதமான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவும் இல்லத்தை மீளாய்வு செய்கின்ற நன்நடத்தைகள் உத்தியோகத்தர் ஊடாக மாகாண ஆணையாளரின் பூர்வாங்க அனுமதியை பெறவேண்டியதோடு, தற்போதைய தொடர்புகளை பற்றி அறிவித்தல் வேண்டும்.

7.11 தங்கியுள்ள பிள்ளைகள்,அவர்களுடைய வயதை கவனத்திற்கு கொண்டு அவர்களுடைய நலன் கருதி "குழுக்களை" பிரிப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். (மானெல் இல்லம், திஸ்ஸ இல்லம் என்று).

7.12 கட்டுபாட்டுக்கு உட்படாத பிள்ளைகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளானது இல்ல மீளாய்வுகளுக்கு பொறுப்பான நன்னடத்தை திணைக்ளத்தின் உத்தியோகத்தர் ஒருவருடைய ஆலோசனைக்கிணங்க எழுத்துமூலம் குறிப்பிடுதல் வேண்டும்.

7.13 மேற்குறிப்பிடப்பட்டுள்ள வகையில் கட்டுப்பாட்டுக்கு உட்படாத பிள்ளைகள் தொடர்பாக கீழ் குறிப்பிடப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது இருத்தல் வேண்டும்.

(i) உடல் ரீதியிலான தண்டனைகளை வழங்கள் ;

(ii) உள ரீதியிலாக வேதனை படக்கூடிய செயல்கள் .

8. சிறுவர்களின் பங்குபற்றல்.

8.1 ஏதேனும் சிக்கலொன்றை எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில் அது பற்றி இல்ல நிர்வாகி/தாய்/தந்தை முகாமைத்துவ குழு நன்னத்தைகள் உத்தியோகத்தரிடம் அறிவிக்ககூடிய வகையிலான வேலை திட்டமொன்றை தயாரித்தல் வேண்டும்.

8. 2 அன்றாடம் தனது வாழ்க்கையை நேரடியாக பாதிக்கின்ற நலன்புரி கடமைகள் தொடர்பாக சிறுவர்களுடைய கருத்துக்களை கவனத்திற் கொண்டு அதற்கமைய கடமையாற்றுவதற்கு ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.

9. பிள்ளைகளுடைய எதிர்கால நன்மையை கவனத்திற் கொள்ளல்.

9.1 ஒரு பிள்ளை சிறுவர் இல்லத்தை சேர்ந்த 30 நாட்கள் நிறைவு பெறுதற்கு முன்பு பிள்ளையை மீள சமுகமயப்படுத்தல் அவருடைய/அவளுடைய வளர்ச்சி பற்றிய எழுத்துமூல திட்டமொன்றை (வேலை திட்டமொன்றை) தயாரித்தல் வேண்டும்.

9. 2 அத்திட்டத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை உட்படுத்தல் வேண்டும் :-

(i) பிள்ளையின் வரலாற்றை கவனத்திற் கொண்டு அவருடைய தேவைகளை இணங்கானல் ;

(ii) பிள்ளையின் சார்பாக நிறைவேற்றி கொள்வதற்கு எதிர்பார்க்கின்ற நோக்கங்கள் ;

(iii) அந்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் ;

(iv) பிள்ளைகள் தொடர்பான கல்வி திட்டம் ;

(v) பெற்றோர்கள் மற்றும் பொறுப்பாளருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல், முன்னேற்றுதல் மற்றும் முன்னெடுத்தல் தொடர்பான செயற்பாடுகள் ;

(vi) பிள்ளைக்கு பெற்று கொடுக்கவேண்டிய விஷேட சேவைகள் என்றால் அவை ;

(vii) கீழ் குறிப்பிடப்படுகின்ற வகையில் பிள்ளையை மீண்டும் சமுகத்திற்கு இணைப்பதற்காக தயாரிக்கப்பட்ட வேலைத்திட்டம்.

* பிள்ளை வசிக்க வேண்டிய இடம்.

* பிள்ளைக்கு எவரால் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது ?

* மீண்டும் ஒரு முறை பிள்ளை சிறுவர் இல்லத்தில் சேர்வதை தவிர்த்தல்.
* எவ்வாறு பிள்ளைகளை பராமரிப்பது?

9.3 சிறுவர் தொடர்பாக திட்டமொன்றை தயாரிக்கும் போது கீழ் குறிப்பிடப்படும் நபர்களை தொடர்புபடுத்திக் கொள்ளல் வேண்டும் :-

* பிள்ளையின் பெற்றோர் அல்லது பொறுப்பாளர் ;
* பிள்ளை ;
* இல்லத்து நிர்வாகி/நடாத்துநர் ;
* இல்லத்தை மீளாய்வு செய்கின்ற நன்னடத்தைகள் திணைக்கள உத்தியோகத்தர்.

9.4 பிள்ளை தொடர்பான திட்டத்தை தகுந்த காலத்தில் கலந்துரையாட தேவையான திருத்தங்களை மேற்கொள்ளல் வேண்டும்.

9.5 ஏதேனும் ஒரு கால எல்லைக்காக (ஓராண்டிற்கு, ஈராண்டிற்கு, ஆகக்கூடிய வகையில் மூன்று வருடங்களுக்கு) உட்படுத்தப்பட்ட பிள்ளை, அக்காலம் பூர்த்தியடைவதற்கு முன்பு மீண்டும் அவருடைய குடும்பத்தோடு/ பொறுப்பாளரிடம் அல்லது உறவினரிடம் கையயளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை கட்டாயமாக மேற்கொள்ளல் வேண்டும்.

5- 623

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.